வாராந்த சஞ்சிகை
# சுடர் ஒளி
மே 13 - 19, 2015
பக்கம் 24
விலை 30/-




# சாக மறுக்கும் சர்வதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் படுபாதகங்கள்...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாக மறுக்கும் சர்வதிகாரம்

> மஹிந்தவைப் பிரதமராக்க வேண்டுமெனவும், நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஊழல் மோசடி எதிர்ப்பின் ஆணைக்குழுவின் முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களும், இப்படியான ஒரு மிரட்டலுக்கு வலுச் சேர்க்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி நடவடிக்கைகள் என்று கருத இடமுண்டு.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததன் பின்பு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற நிலையில் மக்கள் மத்தியில் இது வரை நிலவி வந்த ஆட்டத்தில் சர்வதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, சவப் பொட்டி களில் வைத்து கடைசி ஆணியும் அடிக்கப் பட்டு விட்டதாக ஒரு நம்பிக்கை பிறந்தது. எனினும் அந்த நம்பிக்கை மெல்ல மெல்ல ஈடாட்டம் கண்டு விடக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் நல்லாட்சியை விரும்பும் மக்கள் மத்தியில் தோன்றி யுள்ளது.

மீண்டும் மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவது என அவரின் ஆதரவாளர்கள் கொழும்பில் கண்டியில் எனப் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்திய போது அதை எவரும் பெரிதாகப் பொருட்படுத்த வில்லை. அது தோல்வியுற்றவர்களின் மலட்டுக் கூச்சல் என்றே பலரும் நம்பினர். ஆனால் அடுத்தடுத்து இடம்பெறும் சம்பவங்கள் அப்படியான நகர்வுகள் இலகுவாக அலட்சியப்படுத் தப்பட முடியாதவை என்பதை உணர்த் தியுள்ளன.

குறிப்பாக ஊழல் மோசடி எதிர்ப்பு விசாரணைப்பிரிவு மஹிந்தராஜபக்ஷவை விசாரணைக்கு அழைத்தமை யை ஆட்சேபித்து மஹிந்த ஆதரவாளர் கள் நாடாளுமன்றத்தின் போராட்டத்தை நடத்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்கினர். அதன் காரணமாக நாடாளுமன்றில் அன்று சமர்ப்பிக்கப் படவிருந்த 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஒத்தி வைக்கப்பட்டது. அது மட்டுமன்றி நாடாளுமன்றத்துக்கு வெளியே நீதிமன்ற உத்தரவையும் மீறி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அடுத்த நாளில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஊழல் மோசடி எதிர்ப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப் பட்டதை எதிர்த்து அந்த ஆணைக் குழுவின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டத் தை யும் நீதிமன்றம் தடை செய்திருந்த போதும் அது நடத்தப் பட்டதுடன், மாற்றியமைக்கப்பட்ட தேசியக் கொடியும் அந்த ஆர்ப்பாட்டத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

அதாவது கையில் அதிகாரம் இருந்த போது சட்டத்தையும் தமது விருப்பத்துக்கு ஏற்ற வகையில் வளைந்து சர்வதிகாரம் நடத்திய அதே கும்பல் இன்று அதிகாரம் பறிபோன பின்பும் சட்ட விரோத வழிகளில் அந்த சர்வதிகாரத் தைப் பிரயோகித்துள்ளன. நாடாளு மன்ற ஒழுங்கைச் சீர்குலைப்பது நீதிமன்ற கட்டளையை அவமதிப்பது போன்ற செயல்கள் மூலம் தமது முன்னைய சர்வதிகாரப் போக்கை மீண்டும் நிலை நிறுத்த முயல்கின்றன.

அதன் அடுத்த கட்டம் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன. அதில் ஒரு முக்கியமான கட்டம் தான் இடம் பெற வுள்ளதாகக் கூறப்படும் மைத்திரி பால - மஹிந்த பேச்சு வார்த்தை களாகும்.

ஏற்கனவே இப்படி ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ள போதிலும் அது ஒத்தி வைக் கப்பட்டது. எனினும் அது ஓரிரு வாரங்களாக இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் போது இரு விடயங்கள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவிடம் வலியுறுத் தப் படவுள்ளது. ஒன்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக் ஷவை ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியின் சார்பில் பிரதமர் வேட்பாளராக நிறுத்துவது. அடுத்தது நிதி தொடர்பான குற்ற வியல் விசாரணைக்குழு நிறுவுவது தொடர்பான வர்த்தகமானி அறிவித்தலை மீளப்பெறுவது இந்த விபரங்களை முன்னாள் அமைச்சர் குமார வெல்நம்ம பகிரங்கமாகவே வெளியிட் டுள்ளார்.

இந்த இரு கோரிக்கை களுக்கும் ஜனாதிபதி சம்மதம் தெரிவித்து ஏற்றுக் கொள்வாரா னால் மீண்டும் அகோர சர்வதிகாரம் சிம்மாசனம் ஏற எந்தவித தடையும் கிடையாது. இந்தக் கோரிக்கைகள் மக்களுக்கு மட்டுமன்றி மைத்திரிபாலாவின் அரசியல் வாழ்வுக்கும் கூட ஆப்பு வைக்கக் கூடியவை. எனினும் நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இருக்கும் பலத்தின் அடிப்படையில் அவரை மிரட்டிச் சம்மதிக்க வைக்கும் முயற்சியாக இது மேற்கொள் ளப்படலாம்.

மஹிந்தவைப் பிரதமராக்க வேண்டுமெனவும், நாடாளுமன் றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஊழல் மோசடி எதிர்ப்பின் ஆணைக் குழுவின் முன்னால் நடத் தப்பட்ட ஆர்ப்பாட் டங்களும், இப்படியான ஒரு மிரட்டலுக்கு வலுச் சேர்க்கும் வகையில் மேற்கொள் ளப்பட்ட முன்னோடி நடவடிக் கைகள் என்று கருத இடமுண்டு.

இந்த இரு கோரிக்கைகள் மூலமும் மஹிந்த சகோதரர் களும் அவர்களின் ஆதரவா ளர்களும் பல நன்மைகளைப் பெற முடியும். ஒன்று கடந்த காலங்களில் தாங்கள் மேற்கொண்ட ஊழல் மோசடி களுக்கான தண்ட னை களிலிருந்து தப்பிக் கொள்வது. இரண்டாவது தமது குற்றங்கள் அம்பலப்படுவதன் மூலம் மக்களிடம் செல்வாக்கை இழப்பதைத் தவிர்ப்பது. மூன்றாவது கோத்தபாய வைப் பிரதமராகவோ அல்லது அமைச்சராகவோ ஆக்குவதன் மூலம் ஐ.நா. விசாரணை அறிக்கையின் படி அவர் மீது போர்க் குற்றம் சுமத்தப் படுமானால் அவர் சர்வதேச விசாரணைக்கு உட்படுத் தப்படும் நிலையிலிருந்து தப்புவது. ஒட்டு மொத்தமாக மீண்டும் தங்கள் சர்வதிகார ஆட்சியை நிலை நிறுத்தி அதிகார வெறியாட்டம் ஓடுவது.

ஆனால் இப்படியான ஒரு நிலை ஏற்படும் போது மக்களின் நிலைமை மட்டுமல்ல மைத்திரிபாலவின் நிலை யும் ஆபத்துக்குள் தள்ளப்படும் என் பதில் சந்தேகமில்லை.

எனினும் கடந்த 06.05.2015 அன்று திடீரென மஹிந்த தரப்பினருக்கும் மைத்திரி தரப்பினருக்குமிடையே நாடாளு மன்றத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட மஹிந்த தரப்பைச் சேர்ந்த குமார வெல்கம் பேச்சுக்கள் தோல்வியிலேயே முடிவ டைந் தன எனவும் அதே தரப்பைச் சேர்ந்த டலஸ் ஆழுரப்பெரும எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது சகோதர சர்வதிகாரத்துக்கும் சாதகமாக மைத்திரிபாலவையே வளைக் கும் முயற்சி தோல்வியடைந் துள்ளது எனத் தெரிகிறது. அதாவது மைத்திபால அடுத்த கண்டத்திலிருந்து சாதுரியமாகத் தப்பி விட்டார்.

எனினும் சவப்பெட்டியில் வைக்கப்பட்ட சர்வதிகார இலக்குகள் ஆணி அடிக்கப்படும் வரை மீளெழ முயற்சி செய்து கொண்டே இருக்கும். நாட்டு மக்களும், நல்லாட்சியை நிலை நிறுத்த முயல்பவர்களுக்கும் உயர் விருப்பு நிலையில் இருக்க வேண்டிய தருணம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமேல் அழலாம்

- ஆதங்கன்

**குருதியாறு பெருக்கெடுத்து நந்திக்கடலின் நீர்மட்டத்தை உயர்த்திக் கொண்டேபோனது. பொஸ்பரஸ் குண்டுகளில் பொசுங்கிய உடலங்கள் வன்னி மண்ணெங்கும் நீக்கமற விதைக்கப்பட்டன. குண்டுகளில் இருந்து தப்பித்துக் கொண்டவர்களை குதறித்தீர்த்தன கொலைவெறிப்படைகள். பெண்களின் உடலங்கள் இராணுவத்தின் காமப்பசிக்கு இரையாக்கப்பட்ட பின்னர் உயிரற்றதாக்கப்பட்டு, கண்காணா இடங்களில் வீசப்பட்டன. சந்தேகத்துக்கிடமான ஆண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு தலையில் வெடி வைத்து சிதறடிக்கப்பட்டனர் பிணங்களாக. இதுவரை இப்படிப் பட்ட பேரழிவினை கண்டிராத தமிழினம், இத்தனை நாளும் தன் கவசமாக வைத் திருந்த விடுதலைப்போராட்டத் தையும் ஆயுதங்களையும் வேறுவழியின்றி முள்ளிவாய்க் கால் பேரழிவோடு மௌனிக்க வேண்டியதாயிற்று.**

தமிழர்களின் வரலாற்றில் மே மாதம் அவ்வளவு இலேசாக மறந்துவிடக்கூடியதொன்றல்ல. 2009 க்கு முன்னர் வரை எப்படி ஜூலை மாதம் தமிழர்களின் மனதில் ஒரு கறுப்பு மாதமாகப் படிந்து போனதோ அதனை விடவும் பல மடங்கு வலியினைத் தந்த மாதமாக மே மாதத்தை மாற்றிவிட்டது முள்ளிவாய்க்கால் பேரவலம். முப்பது வருடங் களுக்கு மேலாக நிகழ்ந்துவந்த உரிமைப் போராட்டத்தை மட்டுமல்லாது அதற்கு உறுதுணை யாக இருந்த பல்லாயிரக்கணக் கான பொதுமக்களையும் முள்ளிவாய்க்கால் விழுங்கிக் கொண்டது இந்த மே மாதத்தில்தான்.

வெளியுலகுடனான சகல தொடர்புகளையும் துண்டித்து விட்டு, கடல் சார் சதுப்பு நிலத்தில் லட்சக்கணக்கான மக்களை முற்று கைக்குள் கொண்டு வந்து, சர்வ தேச நாடுகள் அள்ளிக் கொடுத்த குண்டுகளையும், சுடுகலன்களை யும் இலங்கை அரசு பரிசோதித் துப் பார்த்து மகிழ்ந்தது. உலக நாடுகளில் தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள், கொத்துக் குண்டுகள் என்பன வன்னியெங்கும் தாராளமாக விசிறப்பட்டு, உயிர்களைக் காவு கொண்டன. எல்லாவற்றையும் உள்ளிட்ட சர்வதேச அமைப்பு களும், நாடுகளும் கண்ணை மூடிக்கொண்டு தம்பாட்டில் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டன.

இது இலங்கைப் படைகளுக்கு இன்னும் வசதியாகப் போனது.

குருதியாறு பெருக் கெடுத்து நந்திக்கடலின் நீர்மட் டத்தை உயர்த்திக் கொண்டே போனது. பொஸ்பரஸ் குண்டுகளில் பொசுங்கிய உடலங்கள் வன்னி மண்ணெங் கும் நீக்கமற விதைக்கப் பட்டன.




குண்டுகளில் இருந்து தப்பித்துக் கொண்டவர்களை குதறித்தீர்த்தன கொலைவெறிப்படைகள். பெண்களின் உடலங்கள் இராணுவத்தின் காமப்பசிக்கு இரையாக்கப்பட்ட பின்னர் உயிரற்றதாக்கப்பட்டு, கண்காணா இடங்களில் வீசப்பட்டன. சந்தேகத்துக்கிடமான ஆண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு தலையில் வெடி வைத்து சிதறடிக்கப்பட்டனர் பிணங்களாக. இதுவரை இப்படிப்பட்ட பேரழிவினை கண்டிராத தமிழினம், இத்தனை நாளும் தன் கவசமாக வைத்திருந்த விடுதலைப்போராட்டத்தையும் ஆயுதங்களையும் வேறுவழியின்றி முள்ளிவாய்க்கால் பேரழிவோடு மௌனிக்கவேண்டியதாயிற்று.

எல்லாம் முடிந்துவிட்டது என்று முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னரும் கூட தமிழினத்தால் தன்னைத்தானே ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடியவில்லை. நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் திறந்தவெளிச்சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு மீண்டும் களையெடுக்கப்பட்டார்கள். காணாமல் போனோர் பட்டியலில் ஆயிரக் கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் இணைக்கப்பட்டார்கள். எல்லா வீடுகளிலும் ஒப்பாரி. ஆனால் அந்த ஒப்பாரியைக் கூட சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாமல் எல்லா வலிகளையும் மனதுக்குள் ளேயே. வைத்துப் புழுங்க வேண்டி யிருந்தது. மக்கள் இறந்து போன தம் உறவுகளை நினைத்து ஒரு தீபமேற்றவோ அல்லது கண்ணீர் விடவோ முடியாத அளவுக்கு மஹிந்த அரசாங்கம் தனது இரும்புப்பிடியை தளர்த்தாமல் எங்கள் குரல் வளையை நசுக்கியபடியே இருந்தது. 6 வருடங்களாகத் தங்கள் உள்ளத்து வலிகளை உள்ளுக்குள்ளேயே பூட்டிவைத்திருந்த மக்கள் என்றைக்காவது தாங்களும் பகிரங்கமாக தங்கள் உறவுகளுக்காக கண்ணீரால் அஞ்சலிக்கும் நாள் வராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். மக்கள் இவ்வாறு ஏங்கிக் கொண்டிருக்கையில் எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல, ஒவ்வொரு மே 18 ஆம் திகதியும் போர் வெற்றி நாளாகக் கொண்டாடி மகிழ்ந்தது அரசு. இங்கே தமிழ் மக்கள் அழுவதற்கும் அனுமதியின்றி வேதனையில் துடிக்க, தென்னிலங்கையில் வெற்றிப்பட்டாசுகளின் ஒலி ஒவ்வொரு மே 18 இலும் ஒலித்துக் கொண்டிருந்தது.



இந்த நிலையில் மைத்திரி அரசு உருப்படியான ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. வழமையாக நடைபெறும் வெற்றிக் கொண்டாட்டத்துக்குப் பதிலாக இந்த வருடத்தில் இருந்து மே 18 ஐ போரில் உயிர் துறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக அறிவித்திருக்கிறது.உண்மையிலேயே இந்த அறிவிப்பு தமிழர்களின் மனங்களை ஓரளவுக்கேனும் குளிர்வித்திருக்கின்றது. ஏனெனில் இனிமேல் இங்கே தமிழர்கள் அஞ்சலிக்க முடியாமல் அவதிப் படுகையில் தென்னிலங்கையில் இருந்து நாரசாரமாக ஒலிக்கும் வெற்றிப்பேரிகையில் எரிச்சல் தரும் ஒலி கேட்கப்போவதில்லை. மாறாக அங்கும் இங்கும் போர் காவு கொண்டவர்களுக்கான அஞ்சலித்தீபங்கள் ஒளிரப்போகின்றன. இந்த முறையாவது எங்கள் உறவுகளுக்கான கண்ணீர் யாருக்கும் அஞ்சி அடக்கி வைக்காமல் சுதந்திரமாக விழிகளில் இருந்து புறப்படப்போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிந்த திருமணப் பேச்சு மீண்டும் கனியுமா?

> மீண்டும் மஹிந்தவை ஆட்சிப் பீடத்தில் ஏற்றத் துடித்த சகபாடிகள் சப்பென முறித்த திருமணத்தை, மைத்திரியை வளைத்துப் போட்டுஇணைக்க முயற்சித்தனர். எனினும் மஹிந்தவின் கூட்டத்தினர் கூறியது போன்று மணமகளில்லாத திருமணத்தில் மஹிந்தவுக்கு என்னவேலை எனக் கூறியது மட்டுமல்லாது தேவையான பொழுது மஹிந்த மேடைக்கு வருவார் எனக் கூறினர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக் கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையிலான சந்திப்பு பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட போதி லும் பெறுபேறு எதுவுமின்றி முடிவடைந் துள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனு சமர்ப்பித்த வேளை இரு வரும் ஒரு வரையொருவர் சந்தி த்துக் கொண் டனர். கைலாகு கொடுக்க மறுத்த மைத்திரி கறை படிந்த கையை ஒரு தரம் தொட்டுப் பார்க்கவும் மறுத்தி ருந்தார். அதே கையை மீண்டும் அணைப்பாரா அல்லது உதவு வாரா என அனைவரும் எதிர்பார்த்தனர். மீண்டும் அதே பாணி யில் ஒரு கும்பிடு. நெருக்கமற்ற சந்திப்பு, ஆதரவாளர்கள் . முன்னாள் அமைச்சர் கள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள் எதிர் பார்த்தவாறு முறிந்த திருமணம் சிதை ந்தே போய்க் கிடக்கிறது.

மீண்டும் மஹிந்தவை ஆட்சிப் பீடத்தில் ஏற்றத் துடித்த சகபாடிகள் சப்பென முறித்த திருமணத்தை. மைத்திரியை வளைத் துப் போட்டு இணைக்க முயற்சித்தனர். எனி னும் மஹிந்தவின் கூட்டத் தினர் கூறியது போன்று மணமகளில் லாத திருமணத்தில் மஹிந்தவுக்கு என்ன வேலை எனக் கூறியது மட்டுமல்லாது தேவையான பொழுது மஹிந்த மண மேடை க்கு வருவார் எனக் கூறினார்கள்.

ஆனால் அந்த எண்ணம் மைத்திரியால் தவிடு பொடியாக் கப்பட்டு விட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக் காவுக்கும் துரோகம் இழைத்து காட்டிக் கொடுக்க மறுத்து விட்டார்கள். ஜனாதிபதி எதிர்பார்க்காத வகையில் முன்னாள் ஜனா திபதி சந்திரிக்கா மற்றும் தற்போதைய பிரதமர் ரணில் ஆகியோ ரால் அரங்கேற்றப்பட்ட ஆட்ட நாயகன். அவர்களை ஏறி மிதிக்க மைத்திரி ஒரு போதும் உடன்பட மாட்டார். அடிபட்ட சிங்கமாகக் திரும்பியிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ மற்றொரு நகர்வை எப்படியும் எட்டிப் பார்க் கவே விரும்புவார். இரத்த வாடையை ருசித்த சிங்கம் குகைக்குள் பதுங்கியிருக்காது. தன் சகாக்களுடன் மீண்டும் வருவது தவிர்க்க முடியாதது.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் பல் வேறு மோசடிகளிலும் ஆண் பெண் வேறுபாடின்றி போட்டுத் தள்ளினர். கோடிக் கணக்கான ரூபாய்கள் கொட்டிச் சிதறின. ஒவ்வொருவராக மெல்ல மெல்ல இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் விசார ணைக்கு அழைக் கப்பட்டு விளக்கமறியலில் தள்ளப் பட்டனர். விளக்கமறியலுக்குச் செல் லும் ஊழல் வாதிகள் அதற் குள்ளும் ஊழல் செய்து சிறைச் சாலை வைத்தியசாலையிலும் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் சொகுசுக் கட்டில் களிலும் தம் விளக்கமறியல் காலத்தை கடத்துகின்றனர்.

அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலுள்ள அதி நவீன வைத்திய சாலைகளை விட, இலங்கை சிறைச் சாலை வைத்தியசாலை பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. கோடிக் கணக்கான பணத்தைச் சுருட்டி வெளிநாட்டு வங்கிகளிலும் பெட்டகங் களிலும் வைத்ததாகச் சந்தேகப்படும். இலங்கைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கில்லாடிகளுக்கு அரசும் துணை போகின்றதா என்ற பெரும் சந்தேகம் எழுகிறது. வீட்டிலிருந்து போடும் மாத்திரைகளையும் மருந்து களையும் இப்போது சிறைச்சாலை வைத்தியசா லையிலிருந்து விழுங் குகின்றார்களா? அல்லது விற்றமின் குளிசைகளையும் ரொனிக்கு களையும் பருகுகின்றார் களா? என ஒரு சந்தேகமும் எழுகின் றது.

போகும் போக்கைப் பார்த்தால் சிறைச் சாலைக் கட்டிலுக்கும் தட்டுப்பாடு வரும் போல் இருக் கின்றது.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணிலையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வை யும் காட்டிக் கொடுக்க மறுத்தது போல் தமிழ்மக்களையும் காப்பாற்ற இணை வாரா?

சிறையிலுள்ள எம் உறவுகளை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுவிக்க வேண் டும். தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளை விடுவித்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும். நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். ஜனாதிபதி தேர்தல் காலத்தில் சிங்களச் சகோதரர்களின் வாக்கு வங்கியைப் பலப்படுத்த, தமிழர்கள் பற்றி ஒரு வார்த்தை தானும் பேச மறுத்ததை நாம் மறந்து விடவில்லை.

முறிந் த திருமணம் மீண்டும் இணைந்தால் தமிழ்- முஸ்லிம் மக்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகி விடும். இனவாதம் தலைவிரித்தாடும். அதற்குக் கட்டியம் கூறுவது போல், இனவாதிகள் தேசியக் கொடி விவ காரமும் தேசிய கீத விவகாரமும் நெஞ்சில் நெருப்பாகக் கொதிக்கிறது. விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்படும். அதாவது ஜுன் மாதம் கலைக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் தேர்தல் நடைபெற உள்ளதாக அரசல் புரசலாகப் பேசப்படுகிறது. அரசமைப்புக்கான 20ஆவது திருத்தமே இந்தக் கால எல்லையை நிர்ணயிக்கப் போகின்றது என்பது மட்டும் உண்மை.

மஹிந்த மைத்திரி சந்திப்பு ஒரு வகைசார் மூடு மந்திரமாகவும் தென்படலாம். அது விரைவில் வெளிச்சத்துக்கு வந்தேயாக வேண்டும். இந்தச் சந்திப்பு மஹிந்தவுக்கும் சிங்கள, இனவாதிகளுக்கும் ஒரு "பிளஸ் பொயின்ற்" ஆகவே உள்ளது. நான் எல்லாவற்றையும் மறந்து சந்தித்தேன். மைத்திரி தான் விட்டுக் கொடுக்கவில்லை என அனுதாபம் தேட ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இது மஹிந்த பக்கம் மற்றவர்கள் சாய ஒரு ஏதுவாகுமோ...?என்னவோ...?யார் அறிவார்... பராபரமே!!

நந்தன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# போர் விளைத்த இனப் பிளவுகளை சீர் செய்ய முனையலாகாதா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மூவாயிரத்து நானூற்று இரண்டு பேர் போரின் போது தமது அவயவங்களை இழந்து நிர்க்கதிக்கு ஆளாகி உள்ளனர். அவர்களில் தொள்ளாயிரம் பேர், வாழ் நாள் முழுவதும் ஏனையோரால் பாராமரிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்தப் பரிதாபமான நிலையை, மனிதாபிமானத்துடனும் மனம் நொந்தும் வெளிப்படுத்தி உள்ளார் புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக்.

மிக மோசமான காயங்களுக்கு உள்ளாகி உடல் உறுப்புக்கள் அகற்றப்பட்டவர்கள், பார்வைத் திறனை முற்றாக இழந்தவர்கள் , கேட்கும் சக்தியைப் பறிகொடுத்தவர்கள் என்று பலவகைப்பட்ட உடல் பாதிப்புகளுக்கு உள்ளாகியவர்கள். வடக்குக் கிழக்கில் வாழ்கிறார்கள்.

இவை வடக்கு , கிழக்கில் பெரிய அளவிலான தாக்கத்தை, சொல்லும் தரமற்ற பெரும் வாழ்வியல் கொடுமைகளை உற்பவிக்கும் பேராபத்து உண்டு. அதனையே புனர்வாழ்வு ஆணையாளர் விரிவாகவும், மிக விஸ்தாரமாகவும் எடுத்து உரைத்துள்ளார்.

மேற்குறிப்பிட்டவர்களில் உடல் , உளப் பாதிப்புக்களைப் போக்குவதற்கு அதனை நாடி அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டியது அரசின் பொறுப்பே என்றும் அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

அவயவங்களை இழந்த முன்னாள் போராளிகளுக்கு, போரின் போது அவயவங்களை இழந்த படையினருக்கு மேற்கொள்ளப்பட்டது போன்ற சிகிச்சைகளையும், மருத்துவ உதவிகளையும் வழங்குவது தவிர்க்கப்பட முடியாத தேவை என்றும் சுட்டிக் காட்டி உள்ளார்.

போராளிகளாக இருந்தவர்களும், அரசுக்கு ஆதரவாகப் போரிட்ட இராணுவத்தினரும் ஏனைய படையினரும் இந்த நாட்டின் பிரஜைகளே என்ற வகையில் அரசின் அனுசரணையோடு இரு சாராருக்கும் உதவும் திட்டம் வரவேற்றகத் தக்கதும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும்.

மேலும் போரின் போது உடல் உறுப்புகளை இழந்த இராணுவத்தினரைப் பராமரிப்பதற்காக- கவனிப்பதற்காக-"அபிமன்சாலா" நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது போன்று அவயங்களை இழந்த போராளிகளுக்கும் அத்தகைய நிலையங்கள் வடக்கு , கிழக்கு மாகாணங்களில் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக புனர்வாழ்வுத்துறை ஆணையாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

போர்க்காலம் உருவாக்கிய பாதிப்புகளில் இருந்து வடக்கு, கிழக்கு இளைஞர்களுக்கும் பாதிப்புக்கு ஆளாகிய ஏனையோருக்கும் புனர்வாழ்வும் , ஏனைய நலன்களும் அரசினால் செய்யப்படுவது, இயற்றப்படுவது இன சௌயண்ணத்தைத் தோற்றுவிக்கப் பெரிதும் உதவும்.

நன்றும் தீதும் பிறர் தர வரா என்று சங்ககாலப் புலவர் கனியன் பூங்குன்றனார் பதித்துச் சென்ற அர்த்தமுள்ள மனித வாழ்வியலின் எடுகோள் --

எங்கள் நாட்டில் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான போர், இரண்டு பெரும் சகோதரர்களுக்கு இடையில் சமூகங்களுக்கு மத்தியில் உண்டாக்கிய மிகப் பெரும் பிளவுகளை சீர் செய்து பிரிந்தவர்களை கிட்ட நெருங்கி ஒட்டுறவாக வழிவகுக்கும். அதனை நேர் நாடி மூன்று இன மக்களும் செயற்பட வேண்டிய தேவை உயர எழுந்துள்ளது.

நாட்டின் நலன் முன்னிறுத்தி, மூவின மக்களினதும் அரசியல் தலைவர்கள் உணர்ந்து செயற்படும் பெருந்தன்மை விரைந்து வராதா?

# வழி தவறிய வழிகாட்டிகள்

- அக்கினிக்குமரன்

அண்மையில் வியட்நாம் தேசம் விடுதலை பெற்றதன் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவைப் போர்க்காலப் புரட்சிகர நினைவுகளுடன் கொண்டாடியது. அந்த விழாவில் உரையாற்றிய வியட்நாம் பிரதமர் லியன் செங் ஷோச் அமெரிக்க வியட்நம் மக்களுக்கெதிராக ஒரு காட்டு மிராண்டித்தனமான போரை நடத்தியது எனப் பகிரங்கமாகவே தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார்.

இன்று மனிதாபிமானம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் ஓங்கிக் குரெலழுப்பும் அமெரிக்கா வியட்நாமில் நடத்திய கொடூரங்கள் உலக வரலாற்றில் மிக மிக அநாகரீகமான பக்கங்களை உருவாக்கியுள்ளன.

போராளிகள் மறைந்திருப்பதாகக் கருதப்பட்ட மைலாய் என்ற கிராமம்



முதியோர், பெண்கள், சிறுவர் சிறுமியர் என்ற எந்தவித பேதமும் கணக்கில் எடுக்கப்படாமலேயே முழுமையாக அழிக்கப்பட்டது. வரலாற்றில் மிகக் கொடிய ஒரு படை நடவடிக்கையாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. போராளிகள் என்றோ ஆதரவாளர்கள் என்றோ கருதப்பட்டவர்கள் கொடூரமான சித்திவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு பெண்ணை உயிருடன் சிலுவையில் கட்டி வைத்து விட்டு அவளின் ஈரலை வெட்டியெடுத்து கணவனை உண்ணும் படி நிர்ப்பந்தித்த ஒரு சம்பவம் அந்த நாட்டு ஊடகங்களின் பலத்த கண்டனத்துக்கு உள்ளானது. தந்தையின் பாலியல் உறுப்பை மனைவி பிள்ளைகள் முன்னிலையிலேயே வெட்டி எறிவது போன்ற வக்கிரங்களும் இடம்பெற்றன. கண்ணில் படுவோரைக் கொல்வது செல்லுமிடங்களை அழிப்பது என்ற கொள்கை அமெரிக்கப் படைகளால் பின்பற்றப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக வயல் நிலங்களிலும் பயிர்கள் மேலும் ஏஜென்ட் ஆர் எப் என்ற இந்த இராசயனம் விமானம் மூலம் வீசப்பட்டு அழிக்கப்பட்டன. அன்று விளைநிலங்கள் நஞ்சுப்படுத்தப்பட்டமை காரணமாக இன்றும் மக்கள் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

போர்க்காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் காரணமாக வியட்நாம் மக்கள் இப்போதும் கால்களையும் உயிர்களையும் இழந்து கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் இது பெரிய அதிசயமல்ல. அது இன்றும் ஒரு புறம் மனிதாபிமானம் பற்றிக் குரல் எழுப்பிக் கொண்டு மறுபுறம் பயங்கரவாத எதிர்ப்பு ஜனநாயக மீட்பு என்ற பேரில் சகல விதமான அழிவு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. ஈராக் மீது நடத்தப்பட்ட பாலைவனப்பட்டியல் நடவடிக்கையின் போது குறைந்த கதிரியக்கம் கொண்ட குண்டுகளை வீசி மக்களை அழித்தமையை மறந்து விட முடியாது.

இத்தகைய கொடூரமான அழிவு நடவடிக்கைகள் மத்தியிலும் வியட்நாம் மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தை விடாப்பிடியாகத் தொடர்ந்தனர். அந்த விடுதலைப் போரில் 30 இலட்சம் வியட்நாம் மக்கள் பலி கொள்ளப்பட்டனர்.

எத்தகைய இழப்புகளும் அந்த மக்களைச் சோர்வடைய வைத்து விடவில்லை. இறுதி வரை உறுதியுடன் போராடினர். 30.04.1975 இன்று வியட்நாமில் நின்ற கடைசி அமெரிக்கர்களையும் விரட்டி விட்டு சுதந்திர தேசத்தைப் பிரகடனம் செய்தனர்.

வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. மாறி மாறி பல ஆக்கிரமிப்பாளர்களுடன் போராடிப் போராடியே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். வறுமையும், பசியும் அவர்களின் தொண்டைகளை நெரித்தபோதும் அவர்கள் விடுதலையை விட்டுக் கொடுக்கத் தயராகவில்லை. அந்த உணர்வே அவர்களின் மிகப் பெரும் பலமாக இருந்தது.

ஒரு காலத்தில் வியட்நாம் மட்டுமன்றி கம்போடியா, லாவோஸ் ஆகிய இன்னோரன்ன நாடுகள் அடிக்கடி சீனாவின் யுத்த பிரபுக்களாலும் ஜப்பானின் சக்கரவர்த்திகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டன. இறுதியில் மேற்கிலிருந்தும் படையெடுத்து வந்த பிரான்ஸ் தேசத்தால் வியட்நாம் கைப்பற்றப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய சிறு குழுக்களைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜூன் 8, 1972 ஆம் ஆண்டு வியட்நாம் போரின் போது இந்தப்படம் எடுக்கப்பட்டது. தன் கிராமத்தின் மீது போடப்பட்ட குண்டுகளால் எரிக்கப்பட்டு தீக்காயங்களோடு ஓடிவரும் இந்தப் பெண்ணின் கதறல் உலகம் முழுவதும் எதிரொலித்தது. அந்த ஆண்டுக்கான 'புலிட்சார் விருது' பெற்ற இந்தப்படத்தை எடுத்தவர் 'Nick Ut' என்னும் வியட்நாமியப் புகைப்படக்காரர்.

ஒன்றினைத்து ஹோமின் போராட்டத்தை விரிவு படுத்தினார்.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் வியட்நாமை ஆக்கிர மித்த போது வியட்நாம் விடு தலைப் படை ஜப்பானுக்கு எதிரான போராட்டத்தில் குதித்தது. ஜப்பான் தோற்கடிக் கப்பட்டு பின் வாங்கிய நிலையில் மீண்டும் பிரான்ஸ் விடுதலைப் போராளிகளை வேட்டையாட ஆரம்பித்தது.

ஹோசி சிங்கை தலைவராக வும்,ஜியாட்பைத் தளபதியாகவும் கொண்ட விடுதலைப்படை வியட்நாமை பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் போரில் தீவிரமாக இறங்கியது.


உயர்ந்த மலைகளையும், அடர்ந்த காடுகளையும் இலகுவில் கடந்து கொள்ள முடியாத ஆறுகளையும் கொண்ட வியட்நாமின் தொலை தூரக் கிராமங்களில் விடுதலைப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டன. வலிமை மிக்க இராணுவக் கட்டமைப்பும் கொண்ட வியட்நாம் விடுதலை இராணுவமும் கெரில்ல அணிகளும் உருவாக்கப்பட்டன. அதே வேளையில் மக்களும் வெவ்வேறு வழிகளில் விடுதலைப் போராட்டத்துக்கு தமது பங்களிப்பை வழங்கினர்.

ஒரு நீண்ட போரின் மூலம் வியட்நாமின் வட பகுதியின் பெரும் பகுதி விடுவிக்கப்பட்ட நிலையில் பிரான்ஸ் நாட்டின் பெரும் படைத்தளம் அமைக்கப்பட்டிருந்த தியென் பியூ மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தப் போரில் ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் மக்களும், விடுதலைப் போராளிகளும் பலியாகினர். மழையாகப் பொழிந்த விமானக் குண்டுகள் மத்தியிலும் பொது மக்கள் மலைப்பாங்கான ஒற்றையடிப் பாதைகள் வழியாக ஆயுத விநியோகம் போராளிகளுக்கான உணவு விநியோகம் என்பவற்றை வழங்கிப் பாரிய பங்களிப்பை வழங்கினர்.

1954இல் தியலர் பியூ படைத்தளம் வியட்நாம் விடுதலைப் படைகளிடம் முற்றாக வீழ்ச்சியடைந்த நிலையில் விடுதலைப்படை தென்பகுதியை நோக்கி முன்னேறியது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. அதன் படி வியட்நாம், இரண்டாகப் பிரிக்கப்பட்டு வடக்கு ஹனோயைத் தலைநகராகக் கொண்டு தனி நாடாகவும் தெற்கு சைசோசைத் தலைநகராகக் கொண்டு இன்னொரு நாடாகவும் பிரிக்கப்பட்டது. மேலும் இரு வியட்நாம்களும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் ஒன்றிணைக்கப்படுவது எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பல ஆண்டுகளாகியும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாத நிலையில் தென்



வியட்நாம் மக்கள் தமது விடுதலையை போராட்டத்தை ஆரம்பித்தனர். வேகமாக வெற்றியை நோக்கி முன்னேறிய தென் வியட்நாம் போராளிகளைத் தடுத்து நிறுத்த 1964 இல் அமெரிக்க, வியட்நாம் மீது விமானக் குண்டு வீச்சை நடத்தியது. தென் வியட்நாம் பொம்மை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 1965 இல் அமெரிக்கப் படைகள் வியட்நாமில் இறங்கின.

போர் அமெரிக்கவும் விடுதலைப் போராளிகளுக்குமான போராகப் பரிணாமம் பெற்றது.

அமெரிக்கா தனது முழுப்பலத்தையும் பிரயோகித்த போதும் விடுதலைப் போரின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. நாள்கணக்காக தொடர் விமானக் குண்டு வீச்சுக்கள், பெரும் படை நகர்வுகள், மக்களைக் தொகை தொகையாகக் கொன்று குவித்தல் எனப் பல கொடூர வழிகளைக் கையாண்டும் அமெரிக்காவால் வெற்றி பெற முடியவில்லை.

1973 இல் அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்குமிடையே நடந்த பேச்சுக்களின் அடிப்படையில் அமெரிக்கப் படைகள் வியட்நாமைவிட்டு வெளியேறிய போதும் ஆலோசகர்கள் என்ற பேரில் அவர்கள் தென் வியட்நாமில் தங்கி நின்று பொம்மை அரசின் படைகளை வழி நடத்தினர்.

எனினும் 1975 இல் விடுதலைப் படைகள் தென் வியட்நாம் தலைநகராகிய சைக்கோசையும் கைப்பற்றியதுடன் வியட்னம் விடுதலை போர் முழுமையான வெற்றியுடன் நிறைவுக்கு வந்தது.

வியட்நாம் விடுதலைப் போராட்டம் இடம் பெற்ற போது உலகின் தலைநகரங்கள் எங்கும் வியட்நாம் மக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடந்தன. தமிழ் மக்களுக்கும் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் மூலம் வியட்நாமுக்கு ஆதரவு வழங்கினர்.

ஆனால் வியட்நாம் இன்று எங்கு ஒரு விடுதலைப் பேராட் டத்தில் தனது ஆதரவைத் தெரி விப்பதில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச நடவடிக்கைகளின் போது அது இலங்கை அரசின் பக்கமே நின்றது. அதே வேளை அமெரிக்காவுடன் இணைந்து கம்போடியாவில் பொல் பொட் ஆட்சியைக் கவிழ்க்கப்படை அனுப்பியதை மறந்து விட முடியாது.

ஒரு காலத்தில் விடுதலை வேண்டும் மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய வியட்நாம் இன்று விடுதலையின் எதிரியாக மாறி விட்டது.

ஆனால் விடுதலைப் போராட் டங்கள் எவரின் ஆதரவுக்காகவும் காத்திருப்பதில்லை. அது வெற்றி வாகை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

***

**வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட் டம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. மாறி மாறி பல ஆக்கிரமிப்பாளர்களுடன் போராடிப் போராடியே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். வறுமையும், பசியும் அவர்களின் தொண்டை களை நெரித்தபோதும் அவர்கள் விடுத லையை விட்டுக் கொடுக்கத் தயாராக்கவில்லை. அந்த உணர்வே அவர்களின் மிகப் பெரும் பலமாக இருந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்து கொண்டிருக்கின்றது எண்ணெய்ப் பூமி 2

வரலாற்றில் தீவிரவாதிகளும் சரி போராளிகளும் சரி உருவாகிக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

இருப்பார்கள்!

இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

ஆனாலும் இவர்களுக்கிடையே பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இப்போது ஐ.எஸ். கட்டவிழ்த்துள்ள வன்முறைகளைப் பார்த்தால் இதன் தன்மை நன்றாகவே புரியும்.

ஈராக்கில் உள்நாட்டுப் போர்.

அரசுக்கும், இஸ்லாமிக் ஸ்டேட் ஒப் ஈராக் என்ற அமைப்புக்கும் இடையே நடந்து வருகிறது.

ஈராக் அதிபர் ஜலால் தலபானி, ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர். எதிர்த்துப் போராடும் கலவரக்காரர்களோ, சுன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

ஏன் இந்தப் போர்..?

அந்த நாட்டு அரசு இஸ்லாம் சட்ட மரபை மீறி செயல்படுவதாக செய்தி.

இப்போது ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் உள்ள திக்ரித் நகருக்குள் ஈராக் இராணுவம் நுழைந்து முன்னேறி வருகிறது.

ஈராக்கில் திக்ரித்தில் இராணுவம் இடையேயான போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. முன்னேறிவரும் இராணுவத்துக்கு தீவிரவாதிகள் எதிராக குளோரின் வாயுவை ஆயுதமாக பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது.

ஈராக்கில் ஐ.எஸ். வசம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் வீழ்ந்து விட்ட, முன்னாள் அதிபர் சதாமின் சொந்த நகரமான திக்ரித்தை மீட்கும் முழு முயற்சியில் இராணுவம் இறங்கி உள்ளது.

இருதரப்பு இடையே கடும் போர் நடைபெற்று வருகிறது.

ஈராக்கிலும், சிரியாவிலும் ஐ.எஸ். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி உள்ள ஐ.எஸ். தனிநாடு உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர்.

தொடர்ந்து நாசவேலைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை குறி வைத்து அமெரிக்கா போர் விமானங்கள் மூலமாக வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது.

ஐ.எஸ். மீது குறிப்பிட்ட அளவுக்கு தரைவழித் தாக்குதல் நடத்தவும் படைகள் தயார் படுத்தப்பட்டு உள்ளன. ஈராக் நகரில் முக்கிய நகரங்கள் ஐ.எஸ். பிடியில் உள்ளது. ஐ.எஸ்.க்கு எதிராக ஈராக் படை, அமெரிக்க இராணுவ உதவியுடன் போர் புரிந்து வருகிறது.

ஈராக் படை அந்த நாட்டின் மக்கள் அதிகமாக வசிக்கும், திக்ரித் நகருக்குள் நுழைந்துள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக, கடந்த 10 நாள்களாக போரிட்டு நகருக்குள் ஈராக் படை நுழைந்து உள்ளது. அங்கு இருதரப்புக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது.

ஈராக் இராணுவம், துணை பாதுகாப்புப் படை உதவியுடன் முன்னேறி வருகிறது.

ஏற்கனவே அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகளின் படை தீவிரவாதிகளிடம், இருந்து ஒருசில நகரங்களை திரும்ப மீட்டது. திக்ரித் நகரையும் மீட்க ஈராக் இராணுவம் போராடி வருகிறது. இது மிகப்பெரிய



அடியாகும். இதற்கிடையே ஈராக் இராணுவத்தை குறிவைத்து கார் வெடிகுண்டு தாக்குதலும் நடத்தி உள்ளனர்.

உலகின் மிகப்பெரிய பயங்கர இயக்கமாக உருவெடுத்துள்ள ஐ.எஸ். அதன் கொடூரத் தாக்குதல்களால் சர்வதேச நாடுகளுக்குப் பெரும் அச்சம்

அல்கொய்தா, தலிபான், லஸ்கர் இதொய்பா போன்ற இயக்கங்களைவிட பணபலத்திலும்சரி, படைபலத்திலும்சரி மிக வலுவானதாக உருவெடுத்துள்ளது.


இதுவரை பார்க்காத அதிக பண பலத்தைக் கொண்டுள்ள இயக்கமும் இதுதான்.

ஈராக்கிலும், சிரியாவிலும் பல்வேறு எண்ணெய் வளங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ்., எண்ணெய் விற்பனை மூலம் ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் முதல் 2 மில்லியன் டொலர்கள் வரை சம்பாதிக்கிறதாம்.

இது தவிர, பல நாடுகளைச் சேர்ந்த அந்த இயக்கத்தின் அனுதாபிகளின் நன்கொடை மூலமும் நிதி நிலைமையை வளப்படுத்துகிறது.

அல்கொய்தாவிலிருந்து பிரிந்த இயக்கம்தான் ஐ.எஸ்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக 2011 முதல் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்த ஐ.எஸ்., 2014 ஜூனில் தங்களது தாக்குதலை ஈராக்கின் வடக்கு, மேற்குப்புற பகுதிகளில் தீவிரப்படுத்தி, இப்போது பெரும்பாலான பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.




சிரியா, துருக்கி எல்லையில் குர்திஸ் பிராந்தியத்தில் உள்ள சிரியாவின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றான கொபானியும் ஐ.எஸ். இன் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

அரசுப் படைகளுக்கு ஆதரவாகச் செயல்படுவோரை கூட்டம் கூட்டமாகப் பிடித்துவைத்துக் கொல்லும் இந்த இயக்கத்தின் கொடூர பாணி சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த இயக்கத்தின் தாக்குதல் முறையால் ஈர்க்கப்பட்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து ஐ.எஸ். இல் சேர்ந்து வருவதுதான் பேரதிர்ச்சி.

ஈராக், சிரியாவில் மொத்தம் 20,000 முதல் 31,500 பேர் ஐ.எஸ். படையில் செயற்பட்டுக் கொண்டிருப்பதாக அமெரிக்காவின் மத்திய புலனாய்வு முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 80 நாடுகளைச் சேர்ந்த 15,000 பேரும் அடக்கம்.

ஈராக்கில் சதாம் உசேன் வீழ்ச்சிக்குப் பிறகு நேரடி இராணுவ நடவடிக்கையில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்த அமெரிக்கா, ஐ.எஸ்.இன் எழுச்சியைப் பார்த்து தனது முடிவை மாற்றிக்கொண்டது.

ஐ.எஸ். இயக்கத்தின் ஆதிக்கம் மத்திய கிழக்கு முழுவதும் வலுவடையாமல் தடுக்கும் பொருட்டு கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் விமானத் தாக்குதலில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

ஐ.எஸ்.க்கு எதிரான சர்வதேச கூட்டணியையும் செப்ரெம்பர் 10இல் அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்தார்.

இந்தக் கூட்டணியில் பிரிட்டன், கனடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உட்பட 60 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், நேரடி இராணுவ நடவடிக்கையில் சவூதி அரேபியா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட சில நாடுகளே ஈடுபட்டிருக்கின்றன.

பிற நாடுகள் போர் உபகரணங்கள், தொழில்நுட்ப உதவிகள் போன்றவற்றைச் செய்து வருகின்றன.

இருப்பினும், ஐ.எஸ்.க்கு எதிரான இந்த் தாக்குதல் நடவடிக்கையில் இதுவரை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை.

ஐ.எஸ். ஒரு பக்கம், அதற்கு எதிராக சிரியாவின் இராணுவம், குர்திஸ் படை ஒரு பக்கம் என நாள்தோறும் நடக்கும் சண்டையில் படைவீரர்கள், பயங்கரவாதிகள் இறப்பைவிட, அப்பாவி பொதுமக்களின் இழப்புதான் அதிகமாக உள்ளது.

2011 மார்ச் முதல் 2014 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் சிரியாவில் உள்நாட்டுப் போரால் 1,91,000 பேர் பலியாகியுள்ளதாக ஐ.நா.வின் மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 8000 பேர் குழந்தைகள்.

இது தவிர, சிரியாவிலும், ஈராக்கிலும் இலட்சக்கணக்கானோர் வீடிழந்து, உடைமைகளை இழந்து உள்நாட்டிலேயே அகதிகளாகத் தவிக்கின்றனர்.

80 நாடுகளைச் சேர்ந்த பயங்கரவாதிகள், 60 நாடுகளைச் சேர்ந்த அரசுப் படைகளுக்கு இடையே சிரியாவிலும், ஈராக்கிலும் நடக்கும் சண்டையை உள்நாட்டுப் போர் என்பதைவிட ஓர் உலகப் போர் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூ.வின் முடக்கம்

**- புருஜோத்தமன் தங்கமயில்**

ஜனாதிபதித் தேர்தலின் பின் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையும் அதனூடு கிடைத்த சிறிய ஜனநாயக இடைவெளியையும் பல தரப்புக்களும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டன.

ஆனால், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அரசியல் தலைமை முன்னோக்கிப் பயணிப்பதற்குப் பதிலாக, மீண்டும் மீண்டும் சிக்கலான களத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றதோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடு என்ன, எதிர்காலத் திட்டங்கள் என்ன, மேற்குலகின் ஆதரவு பெற்ற மைத்திரி அரசோடு முட்டி மோதி இனப்பிரச்சினைக்கான தீர்வினை நோக்கி பயணிப்பதற்கான முனைப்புக்கள் என்ன? என்பது தொடர்பில் பெரும் குழப்பம் நீடிக்கின்றது.

தவிர்க்க முடியாமல் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமது அரசியல் தலைமையாக முன்மொழிந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது எரிச்சலை ஊட்டியிருக்கின்றது.

எதிர்கால நலன்களை கருத்தில் கொண்டு தெளிவான திட்டங்களை வகுத்து பெரும் பாய்ச்சல் நிகழ்த்த வேண்டிய கால கட்டத்தில் தமிழர் அரசியல் இருக்கின்றது. ஆனால், அப்படியான புரிதல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தவில்லை. மாறாக, உள்ளக முரண்பாடுகள் மற்றும் அதிகாரப் போட்டிகளின் சிக்கல்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட காலம் தொட்டு, அதற்குள் அதிகாரப் போட்டி இருப்பது உண்மைதான். ஆனால், அந்தப் போட்டியின் அளவு விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நீட்சி என்பது, தமிழ் மக்களின் வாக்குகளுக்காக மட்டுமே என்கிற நிலையை அடைந்துவிட்டது. கொள்கை, கோட்பாடுகள் என்கிற எந்தவொரு புள்ளியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் பெருமளவுக்கு இணைந்து கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியம் எனும் புள்ளியை தமது இணக்கத்துக்கான இடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் காட்டிக் கொண்டாலும் உண்மை வேறு மாதிரியானது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலம், தமிழர் அரசியலில் கத்திமுனைப் பயணத்தை ஒத்தது. எந்தவொரு தருணத்திலும் கவனத்தை சிதறவிட முடியாது.

கொஞ்சம் அசைந்தாலும் பலமான காயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி வரும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் பலர் அதீத விட்டுக்கொடுப்பு எனும் நிலையின் பக்கம் நகர்ந்து பெரும் தூக்கத்துக்கு தயாராகிவிட்டார்கள். அவர்களின் தூக்கம், தமிழ் மக்களின் தலை விதியை இன்னும் இன்னும் மோசமாக எழுதிவிடும் வாய்ப்புள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மென்போக்குள்ள தலைமைகள், கடும்போக்குள்ள தலைமைகள் என்கிற இரு பெரும் பிரிவுகள் இருப்பது போல வெளிப்படுத்தப்பட்டாலும், பெரும்பாலாக அதீத மென்போக்குள்ள தலைமைகள் மற்றும் கடும்போக்குள்ள தலைமைகள் என்கிற இரு பிரிவுகளே உண்டு. கடும்போக்குள்ள தலைமை என்று கொள்ளக் கூடிய சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளியிலேயே இருக்கின்றார்கள். அல்லது, அப்படி அவர்கள் தங்களை உருமாற்றிக் காட்டுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்டவர்கள் அதீத மென்போக்குள்ள தமிழ்த் தலைமைகளாக தங்களை தென்னிலங்கையிடம் வெளிப்படுத்தி வருகின்றனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த் தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சி சாராத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தங்களை கடும்போக்குள்ள தமிழ்த் தலைமைகள் போல காட்டிக் கொண்டாலும் மென்போக்குள்ள தலைமைகளாகவே இருக்கின்றனர்.

இங்கு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எந்த இடத்தில் இருக்கின்றார் என்பதை தெரிவு செய்வதில் பெரும் சிக்கல் இருக்கின்றது. ஏனெனில், அவர், கொழும்பில் ஒருநிலையையும் யாழ்ப்பாணத்தில் இன்னொரு நிலையையும் எடுக்கின்றார்.

ஆனால், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதீத மென்போக் குள்ள தமிழ்த் தலைமை எனும் நிலையிலிருந்து கடும்போக்கு தமிழ்த் தலைமை எனும் நிலையை நோக்கி பயணிக்கின்றார். ஆம், அப்படித்தான் கொள்ள வேண்டியிருக்கின்றது.

வட மாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால், அதிகமான அழுத்தங்களுக்கு மத்தியில் சி.வி.விக் னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாள ராக முன்மொழியப்பட்ட போது இருந்த நிலைமை தற்போது இல்லை.

இரா.சம்பந்தனுக்கும் சி.வி.விக் னேஸ்வரனுக்கும் இடையிலான இடை வெளி இப்பொழுது பெருமளவு அதிகரித்து விட்டது. அது, வெளிப்படையாகவே பல இடங்களிலும் வெளிப்பட்டிருக்கின்றது.

அதுவும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முரண்பாடுகளை இன்னும் மோசமாக்கி விட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒட்டுமொத்த அதிகாரமும் தன்னுள்ளேயே இருக்க வேண்டும் என்று இரா.சம்பந்தன் கருதுகின்றார். ஆனால், அதனை விரும்பாத குழுவினர், சி.வி.விக்னேஸ்வரனுக்கு பின்னால் இருந்து உந்துதல்களை வழங்குகின்ற னர். அந்த உந்துதல்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவி குறித்த கனவை சி.வி.விக்னேஸ் வரனுக்குள்ளும் வளர்த்து விட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சிக்குள்ளும் அதிகாரப் போட்டிகள் பலமாக எழுந்துள்ளன. தற்போதைய

( 22 ஆம் பக்கம் பார்க்க)




> **தமிழீழ விடுதலைப் புலிகளினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட காலம் தொட்டு, அதற்குள் அதிகாரப் போட்டி இருப்பது உண்மைதான். ஆனால், அந்தப் போட்டியின் அளவு விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் நாளுக்கு நாள் அதிகரித்து வந்திருக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்ம சொப்பனம்




நம்மை மிருகத்தனமாக ஆட்சி செய்யும் அரசை நாம் மதிக்க வேண்டுமா? அவர்களுக்கு அடங்கிப் போக வேண்டுமா? அவர்கள் சொல்வதை, செய்வதை பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க வேண்டுமா?

கூடாது. கூடவே கூடாது.

சரி அப்படியானால் என்னோடு சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறீர்களா?

ஆம் தயராக இருக்கிறோம்.

இது ஒரு ஆயுதப் புரட்சியாக இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் தானே?

மிக நன்றாகவே தெரியும்.

அட! அப்படியானால் நீங்களும் ஒரு கம்யூனிஸ்ட் தான்! ஐயோ அப்படி மட்டவ;சொல்லி விடாதீர்கள்.

இதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலாது என்று காஸ்ட்ரோவுக்குத் தெரியும்.

அதே போல் மாணவர்களையும் அழைத்துப் பேசுவார்.

உங்களுடைய வேலை வாய்ப்புக்கள் பறிக்கப் படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய திறமைகள் வீணடிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் உணர்கிறீர்களா?

நிச்சயம் உணர்கிறோம். க்யூபா அரசாங்கம் எங்களை ஏமாற்றி விட்டது.

அரசு ஏமாற்றி விட்டது என்னவோ உண்மை தான். ஆனால் இந்த அரசுக்குப் பின்னால் அமெரிக்கா எனும் பூதம் இயங்கி வருவதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையை தொடக்கத்திலிருந்தே நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் அதாவது...

ஒரு வரலாற்றாசிரியர் போல வகுப்பெடுக்கத் தொடங்கிவிடுவார். மாணவர்கள் அவர் சொல்வதை கவனத்துடன் கேட்டுக் கொள்வார்கள். அமெரிக்காவை எதிர்க்க வேண்டியது உடனடித் தேவை என்று ஒப்புக் கொள்வார்கள்.

இப்போது புரிகிறதா? இது தான் ஐயா கம்யூனிஸம்! என்றால் மட்டும் மிரண்டு போய் ஓழிவிடுவார்கள்.

கம்யூனிஸம் , சோசலிஸம் என்றால் மட்டும் ஏன் இப்படி அலறுகிறார்கள் என்று காஸ்ட்ரோ வருத்தப்பட்டதுண்டு. ஆனால் இந்த அறியாமை விவசாயிகளிடமும் மாணவர்களி டமும் மட்டும் பரவியிருக்கவில்லை. அரசியல் வாதிகளிடமும் படித்தவர்களிடமும் கூட பரவியிருந்தது. க்யூபாவில் மட்டுமல்ல, லத்தீன் அமெரிக்கா முழுவதும் இதே கதைகள் தான். ஆனால் கம்யூனிசத்தைக் கண்டு பயப்படுகிறார்கள் என்பதற்காக இவர்களை ஒதுக்கிவிடவில்லை காஸ்ட்ரோ.

இவர்களின் அறியாமைக்கான காரணத்தையும் அவர் மிகத் தெளிவாக விளக்குகிறார். அமெரிக்கக் கண்டத்திலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் புனித நீர் தெளித்து, கிறிஸ்துவ ஞானஸ்நானம் வழங்கப்படுவதற்கு முன்பே, பிறந்த மறு விநாடியே கம்யூனிஸ எதிர்ப்பு நச்சுப்பால் ஏற்றப்பட்டு விடுகிறது. அமெரிக்காவில் படித்தவர்கள் கூட, கம்யூனிஸம் என்று தான் தெரிந்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே , நன்கு படித்து பட்டம் பெற்றவர்கள் உள்பட மார்க்சியத்தைப் படித்து விட்டு, கம்யூனிஸம் என்றால் என்ன என்று விவாதம் செய்து, விளக்கம் பெற்று, கம்யூனிஸ எதிர்ப்பாளராக மாறுவது கிடையாது. கார்ல் மார்க்சின் படத்தைக் கூட இவர்களில் பலர் பார்த்திருக்க மாட்டார்கள். இருந்தும் எல்லாம் தெரிந்தவர்கள் மாதிரி எதிர்ப்பதாகப் பேசுவார்கள்.

இத்தகையோரின் எதிர்ப்பு, அறியாமையிலிருந்து பிறக்கிறது.

(தொடரும்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 672

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | 4 | 5 |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | |
| 11 | | | | 12 | | | 13 |
| | | 14 | 15 | | | 16 | |
| | 17 | | | | 18 | | |
| 19 | | | 20 | | | | |
| 21 | | | | | 22 | | |

அனுப்புபவர் பெயர்:------------------------------

விலாசம்:------------------------------

------------------------------

### மேலிருந்து கீழ்

1 - ஒருவரை மற்றவருக்குஆ; பழக்கம் செய்வது.
2 - எல்லாவற்றையும் ஒன்றாக நோக்கும் இயல்பு.
3 - கடுமையானது.
4 - ஒரு ரூபாயில் நூறு.
5 - மமதையின் எண்ணம்
7 - கட்டுக்கதை.
9 - உயிரின் ஆரம்பம்.
10- மணம்.
13- மறைத்து வைத்துத் தாக்குவது இதனால்.
15- ஒரு தொழிற்பாடு.
16- பெருக்கல் அடையாளம்.
17- பாதுகாப்புக்கான நீர்க் கிடங்கு.
18 - இளைய சகோதரன்.
19 - பிரேத.

### இடமிருந்து வலம்

1 - பதிப்பித்தல் நடைபெறுவது இங்கே.
4 - எப்போதும்.
6- பசுவில் பால் சுரப்பது இங்கே.
7 - ஒரு கோள்.
8 - ஆறும் கடலும் சந்திக்கும் இடம்.
11 - எண்ணு.
12- தடிமன் வந்தால் வரும்.
14 - கைப்பற்றுதல்.
16 - குளிர்மை.
17 - ஒரு கருவி.
18 - பூமி.
19 - ஒரு குறியீடு.
20 - கால்.
21 - துதி செய்தல்.
22- மேடு.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 672

■ சொற்சிலம்பம் போட்டி 672ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜீன் 03 மற்றும் ஜீன் 10.ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 669இல் பரிசு பெற்றோர்

1. தட்சிகா தருமராஜா, இல 43, கலைவாணி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
2. கே. இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், சுந்தசுவாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.
3. செ. சுதராக், பாலி நகர், வவுனிக்குளம், மல்லாவி.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக் கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

வே. சரஸ்வதி, அம்மன், குடத்தனை.

வி. செல்வநாயகம், சிவன்கோவில் வீதி, புத்தூர்.

செல்வன் ஸ்ரீலக்ஷன், ஆண்டு 8D, மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்.

இ. யூஜினா மரியா, இல 85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்

இ. சண்முகதாஸ், கொத்தியால் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

### சொற்சிலம்பம் போட்டி 670இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**
1. தேசவழமை.
2. சாமரை.
3. பதி.
4. திருமதி.
5. அகல்தல்.
6. கள்.
9. மதி.
11. புவனம்.
14. சம்பவம்.
16. கலக்கம்.
18. தாபகன்.
19. நம்.
21. ரதி.
22. சாது.
24. சதா.

**இடமிருந்து வலம்**
1. தேசாதிபதி.
5. அக.
7. சம.
8. திருமகள்.
10. வரைபு.
12. மதில்.
13. வசதி.
15. தக.
17. மைதானம்.
19. நல்ல.
20. பம்பரம்.
22. சாக.
23. வதி.
24. சக.
25. துன்பம்.
26. சதாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலிர்த்து நிற்கும் சிங்கப்பூர் 4



சிங்கப்பூர் ரொம்பச் சின்ன பகுதி. தயாரிப்பு என்று அங்கே எதுவும் கிடையாது. தண்ணீரைக்கூட மலேசியப் பகுதியிலிருந்துதான் பெற வேண்டும் என்கிற அளவுக்கு ஏதுமற்ற பகுதி அது. என்றாலும் பொருளாதாரத்தில் குதிரைப் பாய்ச்சலுடன் முன்னேறிக் கொண்டு இருந்தது. மலேசியாவின் அதிகார கேந்திரம் கோலாலம்பூரிலிருந்து சிங்கப்பூருக்கு இடம் மாறிவிடுமோ என்ற அச்சம் கூட மலேசியாவின் அதிகாரவர்க்கத்துக்கு ஏற்பட்டு இருந்தது.

பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், சிங்கப்பூர் பிரிந்து விடட்டும் என்று நாடாளுமன்றத்துக்கு ஆலோசனை கூறினார். ஆனால் சேர்ந்து இருக்கவே விரும்புவதாக சிங்கப்பூர் தலைவர் லீ குவான் யூ அறிவித்தார்.

நாடாளுமன்ற வாக்கெடுப்பில் 126-0 என்கிற கணக்கில் சிங்கப்பூர் பிரிந்துச் செல்ல வேண்டும் என்பதற்கான ஆதரவு வாக்குகள் விழுந்தன. (சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை).

கண்ணீர் வழிய, சிங்கப்பூர் தனி நாடாகி விட்டது என்று அறிவித்த லீ குவான் யூ அதன் பிரதமர் ஆனார்.

பின்னர் 'நியூயோர்க் டைம்ஸ்' இதழுக்கு அளித்த பேட்டியில் அது என் மனதுக்கு மிகவும் வேதனையைக் கொடுத்த தருணம். என் வாழ்க்கை முழுவதும் மலேசியாவுடன் சிங்கப்பூர் இணைந்திருக்க வேண்டும் என்பதே என் எண்ணமாக இருந்தது. இருதரப்பிலும் உள்ள மக்கள் புவியியலால், பொருளாதாரத்தால், ரத்த உறவால் ஒன்றுபட்டவர்கள். இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் பிரிவு நேர்ந்தது மிகவும் துரதிருஷ்டமானது என்றார்.

ஆக மலேசியாவில் இணைந்த இரண்டே வருடங்களில் சிங்கப்பூர் பிரிந்து தனி நாடானது.

சில வருடங்களுக்குப் பிறகு 'நியூயோர்க் டைம்ஸ்' இதழுக்கு மீண்டும் பேட்டியளித்த லீ குவான் யூ மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிந்ததில் எனக்கு மிகவும் வருத்தம். துங்கு அப்துல் ரஹ்மான் (மலேசிய அதிபர்) மட்டும் சிங்கப்பூரை விலக்காமல் இருந்திருந்தால் மேலும் பல முன்னேற்றங்கள் நடைபெற்றிருக்கும். சிங்கப்பூரில் செய்யப்பட்ட பல சாதனைகள் மலேசியாவிலும் நடந்திருக்கும். இன வேறுபாடுகளைக் களைந்து நல்லிணக்கத்தோடு பல்வேறு இனங்களும் நடந்து கொண்டிருப்பது சாத்தியம்தான். இப்போது மலேசியா தனித்தனியாக பிரிந்து செயல்படுவதைப் படிக்கும் போது வருத்தமாக இருக்கிறது. மலாய் மக்கள், சீனர்கள், இந்தியர்கள் ஆகியோர் தனித் தனிப் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பதும், தனித்தனி குடியிருப்புகளில் வசிப்பதும், ஒருவரோடு ஒருவர் கலந்து பழகாமல் இருப்பதும், அண்டை வீட்டுக்காரர்கள் என்ற வகையில் எனக்கு துக்கத்தைத் தருகிறது என்றார்.

சுதந்திரமடைந்ததும் தங்களுக்கு உலக நாடுகளின் அங்கீகாரம் உடனடியாகத் தேவை என்பதை உணர்ந்தது சிங்கப்பூர். ஒரு வேளை இந்தோனேசிய இராணுவம் தங்களைத் தாக்கினால்? மலேசியாவில் ஒரு பிரிவினர் சிங்கப்பூர் பிரியக் கூடாது என்று கொடி பிடித்துக்கொண்டிருந்தனர். ஒருவேளை சிங்கப்பூருக்கு மிகவும் பாதகமான நிபந்தனைகளுடன் மீண்டும் மலேசியா அதைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டால்? பதற்றத்துடன் 1965 செப்டம்பர் 21 அன்று ஐ.நா.வில் உறுப்பினர் ஆனது சிங்கப்பூர். இதற்கு உதவின மலேசிய, இந்திய, சீன அரசுகள். பிரிவினைக்குப் பிறகும் மலேசியாவும் சிங்கப்பூரும் நட்பாகத்தான் இருக்கின்றன. ஆனால் உரசல்கள் இல்லாமல் இல்லை.

**இயற்கை வளங்கள் இல்லாத நாடு சிங்கப்பூர். சொல்லப்போனால் போதிய அளவு நிலம் கூடக் கிடையாத தீவு நாடு. எல்லாவற்றுக்கும் (குடிநீர் உட்பட) பிற நாடுகளை நம்பியிருக்க வேண்டிய சூழல் என்பதால் விலைவாசி பொதுவாக அங்கு அதிகமாகவே இருக்கிறது.**

இயற்கை வளங்கள் இல்லாத நாடு சிங்கப்பூர். சொல்லப்போனால் போதிய அளவு நிலம் கூடக் கிடையாத தீவு நாடு. எல்லாவற்றுக்கும் (குடிநீர் உட்பட) பிற நாடுகளை நம்பியிருக்க வேண்டிய சூழல் என்பதால் விலைவாசி பொதுவாக அங்கு அதிகமாகவே இருக்கிறது.

சிங்கப்பூரைவிட மலேசியாவில் பெற்றோலின் விலை குறைவு. பெற்றோல் மட்டுமல்ல வேறு பல பொருள்களின் விலையும்கூட குறைவுதான். எனவே சிங்கப்பூரில் வசிப்பவர்களில் பலரும் விடுமுறை நாள்களில் மலேசியா சென்று 'ஷொப்பிங்' செய்துவிட்டு அப்படியே தங்கள் காரின் பெற்றோலை நிரப்பிக் கொண்டு வருவது வழக்கமானது. சராசரியாக இப்படி ஒரு நாளைக்கு மலேசியா சென்று வருபவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரித்தது.

மலேசிய அரசு இதை விரும்பவில்லை. மலேசிய எல்லையிலிருந்து ஐம்பது கிலோ மீற்றர் தூரத்துக்குள் இருக்கும் எந்தப் பெற்றோல் நிலையத்திலும் வெளிநாட்டுக் கார்கள் பெற்றோல் நிரப்பிக் கொள்ளக் கூடாது என்று அறிவித்து விட்டது. (வெளிநாடு என்று அறிவித்தாலும் முக்கிய இலக்கு சிங்கப்பூர்தான்).

எங்கள் மக்களிடமிருந்து பெறும் வரிப்பணத்தில்தான் பெற்றோலுக்கு மானியம் கொடுத்து குறைந்த விலையில் விற்கிறோம். இதை எப்படி பிற நாட்டு மக்களுக்கு அளிக்க முடியும்? என்பது மலேசிய நியாயம். இந்த அறிவிப்பு வந்தவுடன் வேறு பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

மலேசிய எல்லைப் பகுதிக்குள் சிங்கப்பூர் பதிவு எண்ணைத் தாங்கிய ஒரு கார் பெற்றோல் தீர்ந்து நின்றுவிட்டால் என்ன செய்வது? மலேசியா இதற்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. வெளிநாட்டினருக்கென்று தனி பெட்ரோல் நிலையங்கள். இவற்றில் பெற்றோலின் விலை சந்தை விலையாகத்தான் இருக்கும். (அதாவது மானியம் கிடையாது). இரு சக்கர வாகனங்கள் விஷயத்தில் மட்டும் கொஞ்சம் தாராளம் காட்டியது மலேசியா. புதிய விதி இரு சக்கர வாகனங்களுக்குச் செல்லாது என்றது. நாங்கள் எளியவர்களின் தோழன் என்றது.


சிங்கப்பூர் தனி நாடாக ஓர் இனக் கலவரமும் முக்கிய காரணமாக அமைந்தது என்றோம். தனி நாடாக ஆனபிறகு அங்கு இனக் கலவரங்கள் நடைபெறவில்லையா?

**(இன்னும் வரும்..)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொறுப்பான நடிகை தான்

இங்கெல்லாம் நாயகிகள் தயாரிப்பாளர்களின் செலவில் மட்டுமே விமானத்தில் போய்வருகிறார்கள். ஆனால், இந்தி நடிகை பிரியங்கா சோப்ரா நிறைய படங்கள் மற்றும் விளம்பரங்களில் நடித்துவருகிறார். அவற்றின் பட பூஜை நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்துகொள்கிறார். நேரத்தை மிச்சப்படுத்தவும், சரியான நேரத்தில் அவற்றில் கலந்துகொள்ளவும், விழாவை குழப்பாமல் இருக்கவும் தனி விமானம் ஒன்றை வாடகைக்கு எடுத்து உபயோகிக்கிறாராம். அதற்கான செலவையும் தன் பணத்தில்தான் செய்கிறாராம்.



## டுவிற்றரில் தெரிவித்துள்ள வாழ்த்து

வித்தியாசமாக போடப்பட்டுள்ள இந்த டியூனால் பிரபு சாலமன் மகிழ்ச்சியில் இருக்கிறாராம். இதுகுறித்து இமான் தனது டுவிற்றர் பக்கத்தில் தனுஷுடனான, பிரபுசாலமனின் அடுத்த படத்துக்கு அவரது பிறந்தநாளில் கம்போசிங் தொடங்கியது. மகிழ்ச்சியாக இருக்கிறது. அத்துடன் எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள் பிரபு சாலமன் என டுவிற்றரில் பதிவு செய்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார் இமான்.

## ஓ... ரஜ...

தனுஷ் ந...
முருகன் எ...
உள்ளது. ...
தேதி வெளி...

## படப்பிடிப்பு ஆரம்...

சரியாக ஒன்பது வரு... களுக்கு முன் அறிமுக... புதிதில் ஜீவாவுக்கு ஜோடியாக நயன்தார... நடித்த ஈ படம் பெரிய வெற்றி பெற்றது. இன்... நயன் ஒரு லேடி சூப்பர் ஸ்டார். சில மாதங்கள... முன் ஜீவாவுக்கு ஜோடியாகும் வாய்ப்ப... சம்பளம் அதிகமாகக் ... நருக்காக நிராகரித்த... ஆனால் பல கட்ட சம... முயற்சிக்குப் பின் பெரி... சம்பளத்துக்கு நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார் ... திருநாள் என்று வைக்கப்பட்டிருக்கும் ... படத்தின் படப்பிடிப்பு கும்பகோணத்தில் தொ...தியுள்ளது!



## குவியும் பட வாய்ப்புகள்

காஞ்சனா 2 வெற்றியைத் தொடர்ந்து டாப்சிக்கு பட வாய்ப்புகள் குவிகின்றன. முக்கியமாக செல்வராகவன் இயக்கத்தில் சிம்பு நடிக்கும் படம், திரு இயக்கத்தில் ஜெய் நடிக்கும் படம், இன்னும் பெயரிடப்படாத இரண்டு படங்களிலும் ஒப்பந்தமாகியிருக்கிறாராம். பேய் வேஷம் போட்டாலே காட்டில் அடைமழைதான் போங்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## உற்சாகத்தில் ஸ்ருதிஹாசன்

தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மோஸ்ட் வான்ட்டட் நாயகனாக இருக்கும் ஸ்ருதிஹாசன் ரமணா ரீமேக்கான கப்பார் இஸ் பேக் படத்திலும் நடித்துள்ளார். தமிழில் சிறிய அளவில் படைக்கப்பட்டிருந்த இந்த பாத்திரம் ஹிந்தியில் மாற்றப்பட்டிருக்கிறது. படமும், இவரது பாத்திரமும் வரவேற்பை பெற்றுள்ளதால் உற்சாகத்தில் மிதந்துகொண்டிருக்கிறாராம் ஸ்ருதி ஹாசன்!



## ரசிகர்கள் அதிருப்தி

மேக்கப் என்றாலே கமல் என்று சொல்லும் அளவுக்கு தனது வடிவம் மற்றும் மேக்கப் விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வார் கமல்ஹாசன். மைக்கேல் வெஸ்ட்மோர் போன்ற சிறந்த வெளிநாட்டு மேக்கப் மேன்கள் பலரையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர். ஆனால் சமீபத்தில் வெளியான பாபநாசம் படத்தில் கமலின் ஒட்டு மீசை அப்படியே தனியாக தெரிவது உறுத்தலாக உள்ளதால், ரசிகர்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.



## ஒரே நாளில் மாரி, ரஜினி முருகன்!

...னுஷ் நடிப்பில் மாரி, சிவகார்த்திகேயன் நடிப்பில் ரஜினி ...ருகன் என இரண்டு படங்களும் ஒரே நாளில் வெளியாக ...ள்ளது. அனிருத் இசையில் மாரி படத்தின் இசை மே 25ம் ...தி வெளியாக உள்ளது.

## சிறந்த நடிகை

சிறந்த நடிகை என்று பெயர் எடுத்த பார்வதி உத்தம வில்லன் படத்தில் சில காட்சிகளே வந்தாலும் கமலுக்கே நடிப்பில் சவால் விடும் அளவில் நடித்துள்ளதால் பாராட்டுகளும், பட வாய்ப்புக்களும் குவிகின்றன. ஆனால் தனது கொள்கைப்படி வந்த வாய்ப்புகளில் நடிப்புக்கு முக்கியத்துவம் தரும் படங்களில் சிலவற்றிற்கு மட்டும் ஒகே சொல்லியிருக்கிறாராம்.

## மாணவர்கள் நலனில் அக்கறை கொள்ளும் சூர்யா

அகரம் அறக்கட்டளையை நிறுவி மாணவர்களின் கல்விக்காக பல உதவிகளை செய்து வருபவர் சூர்யா. தன்னுடைய டுவிற்றர் பக்கத்தில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்காக வாழ்த்துகளையும் கூறியுள்ளார். வெளியாகின்ற உங்களது மதிப்பெண்கள் உங்களின் வெற்றியை நிர்ணயிக்காது. மாணவர்களின் பிரகாசமான எதிர்காலத்துக்கு வாழ்த்துகள் என்று டுவிற்றரில் டுவிற் செய்திருக்கிறார் சூர்யா.

## ...ரம்பம்

...து வருடங் ...அறிமுகமான ...க்கு ...ன்தாரா ... பெரிய ...து. இன்று ...ட் சூப்பர் ...த்தங்களுக்கு ...கு ...வாய்ப்பை ...கமாகக் கேட்டு ...ராகரித்தார். ...ட்ட சமரச ...ின் பெரிய ..., நடிக்க ...டுள்ளார். ...ு ...ருக்கும் இந்தப் ...பிடிப்பு ...தில் தொடங்




## சமூக பாணியிலான படம்

மெட்ராஸ் படத்தின் நாயகி கேத்தரின் தெரசா தமிழில் முதலில் அறிமுகமான படம் கணிதன். ஏ.ஆர்.முருகதாஸின் உதவியாளர் சந்தோஷ் இயக்கிய முதல் படம். அதர்வா நடித்துள்ள இந்தப் படம் கிட்டத்தட்ட முடிந்தேவிட்டது. ஆனாலும் இன்னும் வெளியாகாமல் முடங்கிக் கிடக்கிறது. அதற்குள் மெட்ராஸ் வெளியாகி நல்ல பெயரை வாங்கிக் கொடுத்துள்ளது. கணிதன் ஷங்கர் பட பாணியிலான சமூகப் படமாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் பெரியவர் ?

அக்பர் சக்ரவர்த்தி தனது அவையிலே அமர்ந்திருந்தார். சபையில் அமர்ந்திருந்த அறிஞர்களை நோக்கி, அறிஞர் பெருமக்களே! நான் பெரியவனா, கடவுள் பெரியவரா? என்ற ஐயம் என் மனதில் எழுந்துள்ளது. இந்த வினாவுக்குத் தக்க காரணத்துடன் பதில் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

அக்பரை விட கடவுள் பெரியவர் என்பதை சொல்லவே தேவையில்லை. ஆனால் அரசர் கோபித்துக் கொள்வாரே என எண்ணி மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

மதிநுட்பம் வாய்ந்த அறிஞரான பீர்பால் எழுந்து நின்றார்.

உமது கருத்து என்ன? என அக்பர் கேட்டார்.

மன்னர் பெருமானே, இந்த விஷயத்தில் சந்தேகத்துக்கு என்ன இடம் இருக்கிறது? கடவுளை விடத் தாங்கள்தானே பெரியவர்? என்று கேட்டார் பீர்பால்.

அக்பருக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

மதியூகி பீர்பாலே, உமது கூற்றைத் தக்க காரணத்துடன் விளக்கும் என்றார் அக்பர்.

சக்ரவர்த்தி அவர்களே, என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே என்னை நாடு கடத்திவிடத் தங்களால் முடியும்! ஆனால் கடவுளுக்கு என்னைப் பிடிக்காவிட்டாலும் என்னை நாடு கடத்த முடியாது என்றார் பீர்பால்.

எப்படி? என்று வினவினார் அக்பர்.

உங்கள் ஆட்சிக்குள் இருக்கும் பகுதிகள் ஓரளவுக்குத்தான்! அதனால் உங்களுக்குப் பிடிக்காதவரை அடுத்த நாட்டுக்கு விரட்டியடித்து விடலாம். ஆனால் கடவுளுடைய ஆளுகையோ பூமியில் மட்டுமன்றி அண்டசராசரங்களிலும் பரவியிருக்கின்றது. ஆகவே அவர் எவ்வாறு ஒருவனை நாடு கடத்த முடியும்? ஒருவனை கடவுள் எங்கே விரட்டியடித்தாலும் அவன் கடவுளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில்தானே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க முடியும்? என்று கேட்டார் பீர்பால்.

பீர்பால் தனக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டார் என்பதை அக்பர் உணர்ந்தார். இருந்தாலும் பீர்பாலின் கூற்றிலுள்ள உண்மையை உணர்ந்து அவருக்குப் பரிசுகளை அளித்தார்.

# பொன்மொழிகள்

1. பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்! - புத்தர்
2. நிறையப் பேசாதே; நிறைய கேள்! - காந்தியடிகள்
3. ஆழ்ந்த நம்பிக்கை இமயமலை போன்றது.
   அதை எவராலும் அசைக்க முடியாது! - ஸ்ரீ ராமகிருஷ்ணர்
4. அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை! - அரவிந்தர்
5. கடந்ததைப் பற்றி வருந்தாதே! வருவதைப் பற்றி கற்பனை செய்யாதே! - ஸ்ரீ அன்னை
6. கடுமையாக உழைப்பவனுக்குக் கவலைப்பட நேரமில்லை! - சாணக்கியர்
7. கோபம் அன்பை அழிக்கும். கர்வம் அடக்கத்தைக் கெடுக்கும்! - மகாவீரர்
8. அன்பு இருக்குமிடம் சொர்க்கம்; அன்பு மறைந்த இடம் நரகம்! - திருமூலர்
9. என்னால் இயலாதென்று ஒருநாளும் நினையாதே! - விவேகானந்தர்
10. வீணாகாத ஒரே விஷயம் உழைப்பு மட்டுமே! - டால்ஸ்டாய்
11. நமது வாழ்வை வளமாக்குவது நம்பிக்கைதான்! - நேரு
12. அன்பும் இரக்கமுமே வாழ்க்கையின் அடிப்படை! - வள்ளலார்.
13. நாம் காட்டும் பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக
    ஏதேனும் ஒரு நன்மையைப் பெற வேண்டும் என்று
    எதிர்பார்ப்போம் எனில் நம்மிடம் உண்மையான
    அன்பு உருவாகாது! - விவேகானந்தர்
14. சிறுசிறு செலவுளைப் பற்றிக் கவனமாயிரு.
    ஒரு சிறு ஓட்டையே பெரிய கப்பலை மூழ்கடித்துவிடும்! - பெஞ்சமின் பிராங்கிளின்
15. உலகம் களிமண்ணைப் போன்று மிருதுவானது இல்லை.
    இரும்பைப் போன்று மிகவும் உறுதியானது.
    நீ உன் விடாமுயற்சியாலும், கடும் உழைப்பாலும்தான் இந்த
    உலகத்தில் உனக்கென்று ஒரு இடத்தை
    உருவாக்கிக் கொள்ள வேண்டும் ! - எமர்சன்

# வானம் கறுத்தல்

வானம் கறுத்தால்,
மழை பெய்யும்
மழை பெய்தால்,
மண் குளிரும்
மண் குளிர்ந்தால்,
புல் தழைக்கும்
புல் தழைத்தால்,
பசு மேயும்
பசு மேய்ந்தால்,
பால் சுரக்கும்
பால் சுரந்தால்,
கன்று குடிக்கும்
கன்று குடித்து
மிஞ்சியதை
கறந்து நாமும்
வாழ்ந்திடலாம்;
காய்ச்சி நாமும்
குடித்திடலாம்.

# வர்ணம் தீட்டுவோம்



# காகமும் தண்ணீரும்

காகம் ஒன்று காட்டிலே
தாகத்தாலே தவித்தது
வீட்டின் பக்கம் வந்தது
குடம் ஒன்று கண்டது
அந்தக் குடத்தின் அடியிலே
கொஞ்சம் தண்ணீர் இருந்தது
கல்லைப் பொறுக்கிப் போடவே
தண்ணீர் மேலே வந்தது
ஆசை தீரக் குடித்தது
தாகம் தீர்ந்த காகமும்
வேகமாகப் பறந்தது.



# குரங்கு

குரங்கு (Monkey) ஒரு பாலூட்டி விலங்கு. வால் நீளம் தவிர்த்து 14 முதல் 16 சென்ரிமீற்றர் அளவேயான சிறு குரங்குகள் முதல் ஒரு மீற்றர் உயரமான பெரிய குரங்குகள் வரை குரங்குகளில் பல வகைகள் உள்ளன. பழங்கள், இலைகள், தானியங்கள், கொட்டைகள், பூக்கள், பூச்சிகள், சிலந்திகள், முட்டைகள், பிற சிறு உயிரினங்களைக் குரங்குகள் உண்கின்றன. குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்ற பரிணாம வளர்ச்சிக் கொள்கையை இடார்வின் முன்மொழிந்தார். இராமாயணத்தில் குரங்குககுத் தனி இடம் உண்டு. குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உண்டு. ஒன்று உடலையும் மற்றொன்று வாலையும் செயல்பட வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் தேர்தல்: உண்மை வெற்றி யாருக்கு?

\- கருங்குளவி

பொதுவாகத் தேர்தல் என்றால் கட்சிகளின் கொள்கைகளின் மோதல், தலைவர்களின் திறமைகளின் மோதல் தேர்தல் கூட்டங்களில் செய்யும் பேச்சுக்களின் மோதல் என்பதை நாம் அறிவோம். ஆனால் பிரித்தானியாவில் நடந்து முடிந்த தேர்தல் பிரித்தானியா மக்களுடன் சம்பந்தமில்லாத இரு விற்பன்னர்களின் மோதலாக அமைந்தது. ஒருவர் பராக் ஒபாமாவை இரு தடவை வெற்றி பெறச் செய்த டேவிட் அக்ஸெல்றொட் மற்றவர் ஒஸ்ரேலியாவில் ஜொன்


1. தொழிற்கட்சித் தலைவர் எட்வர்ட் மில்லிபாண்ட் கொன்சர்வேர்டிவ் கட்சியின் தலைவரும் பிரதருமான டேவிட் கமரூனுக்குச் சரியானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான மாற்றீடு அல்லர் எனப் பரப்புரை செய்வது. இதை ஒட்டி எட்வர்ட் மில்லிபாண்டிடம் நாட்டை ஒப்படைப்பது ஜிம்மி சவைலிடம் சிறுவர் பராமரிப்பு வேலையை ஒப்படைப்பது போன்ற கட்டுரைகள் ஊடகங்களில் வெளிவிடப்பட்டன. காலம் சென்ற ஜிம்மி சவைல் பி.பி.சியில் பணிபுரியும் போது பல

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது எடுக்கப்பட்ட படத்தை பத்திரிகைகளில் பிரசுரித்து வருங்கால பிரித்தானியப் பிரதமர் இப்படியா அசிங்கமாகச் சாப்பிடுவது என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டது.

கொன்சர்வேர்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்களே இந்தப் பரப்புரைகள் சில்லறைத்தனமானது என இரகசியமாக ஒப்புக் கொண்டார்கள்.

தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புக்கள் கொன்சர்வேர்டிவ் கட்சியினருக்குத் திருப்தி அளிக்காத நிலையில் லிண்டன்

ஆனால் பாவம் தொழிற்கட்சிக்கு ஆலோசனை வழங்க வந்த டேவிட் அக்ஸெல் றொட்டின் உபாயங்களை நிறைவேற்றப் போதிய பணம் தொழிற்கட்சியிடம் இல்லை. இவரை அழைப்பது என்றவுடன் பணத்தட்டுப்பாட்டில் இருக்கும் எமது கட்சிக்கு இந்த அளவு பணம் செலவழித்து ஒரு ஆலோசகரைப் பெற வேண்டுமா என்ற கேள்வி தொழிற்கட்சியில் உள்ள சிலரிடமிருந்து எழுந்தது. அத்துடன் எமது ஊர்ப் பிரச்சினைகளைப்பற்றி இந்த



ஹோர்வார்டை நான்கு தடவைகள் வெற்றி பெறச் செய்த லிண்டன் குறொஸ்பி. இந்த லிண்டன் குறொஸ்பியே கொன்சர்வேர்டிவ் கட்சியின் பொறிஸ் ஜோன்ஸனை இரண்டு தடவைகள் இலண்டன் மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற வைத்தவர். இவர்கள் தேர்தல் பரப்புரைகளை நடத்துவது தொடர்பாக தந்திரோபாயங்களை வகுத்துக் கொடுப்பார்கள். பரப்புரை உத்திகளை வகுப்பார்கள். இவர்கள் இருவருக்கும் ஆளுக்கு ஐந்து இலட்சம் பவுண் கட்டணமாகச் செலுத்தப்பட்டது. கொன்சர்வேர்டிவ் கட்சிக்கு ஆலோசனை வழங்கிய லிண்டன் குறொஸ்பி தனிமனித நிந்தனைகள் செய்யத் தூண்டுவதில் பெயர் போனவர். ஆனால் கொன்சர்வேர்டிவ் கட்சியினர் டேவிட் கமரூன் தனிமனிதத் தாக்குதல் செய்யக் கூடியவர் அல்லர் எனக் கருதினர். அவர்கள் David is too posh to push என்றனர்

கொன்சர்வேர்டிக் கட்சிக்கு லிண்டன் குறொஸ்பி வகுத்த உபாயங்கள்:

சிறுவர்களை பாலியல் முறைகேட்டுக்கு உள்ளாக்கியவர்.

2. தொழிற்கட்சியுடன் தோழமையாக நடந்து கொண்ட தாராண்மைவாதக் கட்சிக்கு எதிராக தீவிர சந்தைப்படுத்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி செல்வாக்கிழக்கச் செய்தல்.

3. டேவிட் கமரூன் ஆட்சியில் இருபது இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்தமை, அரச பாதீட்டில் துண்டு விழும் தொகைகளைக் குறைத்தமை, வருமானவரிகளைக் குறைத்தமை தொடர்பாக மிகைப்படுத்தப்பட்ட பரப்புரைகளைச் செய்தல்.

4. டேவிட் மில்லிபாண்டின் பலவீனங்கள் மீது தாக்குதல் நடத்துதல். இதற்காக அவர் அவசர அவசரமாகச்

குறொஸ்பி எல்லாம் எமக்குச் சாதகமாகவே நகர்ந்து கொண்டிருக்கின்றது என ஊக்கமளித்தார். பின்னர் கடைசித் துருப்பாக தொழிற் கட்சி

**பிரித்தரனியாவில் நடந்து முடிந்த தேர்தல் பிரித்தானியா மக்களுடன் சம்பந்தமில்லாத இரு விற்பன்னர்களின் மோதலாக அமைந்தது. ஒருவர் பராக் ஒபாமாவை இரு தடவை வெற்றி பெறச் செய்த டேவிட் அக்ஸெல் றொட் மற்றவர் ஒஸ்ரேலியாவில் ஜொன் ஹோவார்டை நான்கு தடவைகள் வெற்றி பெறச் செய்த லிண்டன் குறொஸ்பி. இந்த லிண்டன் குறொஸ்பியே கொன்சர் வேர்டிவ் கட்சியின் பொறிஸ் ஜோன்ஸனை இரண்டு தடவைகள் இலண்டன் மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற வைத்தவர். இவர்கள் தேர்தல் பரப்புரைகளை நடத்துவது தொடர்பாக தந்திரோபாயங்களை வகுத்துக் கொடுப்பார்கள்.**

ஸ்கொட்லாந்துத் தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் அது ஆங்கிலேயர்களுக்கு பெரும் பாதகமாக அமையும் என்ற பரப்புரையைத் தீவிரமாகச் செய்யச் சொன்னார்.

அமெரிக்கர் எப்படி அறிவார் அவர் எப்படி எமக்கு ஆலோசனை சொல்வார் என்ற கேள்விகள் தொழிற்கட்சியினரிடம் எழுந்தது.

டேவிட் அக்ஸெல்றொட்டின் கருத்துப் படி பிரித்தானிய ஊடகங்கள் எல்லாம் மிகவும் கட்சி சார்பானவை. அமெரிக்க ஊடகமரன ஃபொக்ஸ் நியூஸிலும் பார்க்க மோசமானவை பிரித்தானிய ஊடகங்கள். இதனால் அவரது உபாயங்கள் பயனற்றுப் போக மீண்டும் கமரூன் பிரித்தானியப் பிரதமராக மீண்டும் தெரிவாகியுள்ளார். நல்லவேளையாக லிண்டன் குறொஸ்பி பற்றி மஹிந்த இன்னும் அறிய வில்லை போலும். அறிந்திருந்தால் அவர் அடுத்த தேர்தலில் எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் கொட்டி, பிரதமராக முயற்சி செய்யக் கூடும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19 சாதித்தது என்ன?

- குமாரவடிவேல் குருபரன்

**19**ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளமையை ஜனநாயகம் மீளக் கொண்டு வரப்படுவதற்கான ஆரம்பமாக கொழும்பு குதூகலிக்கின்றது. ஜனநாயகம் தொடர்பான குறுங்காலப் பார்வைகள் இத்தகைய கொண்டாட்டங்களை சாத்தியப்படுத்துகின்றன. எந்தளவிற்கு கொழும்பின் மேட்டுக்குடியும் மத்திய தரவர்க்கமும் தனது ஜனநாயகம் தொடர்பான எதிர்பார்ப்புக்களைக் குறைத்துக் கொண்டு விட்டன என்பதற்கு இந்த குதூகலிப்புக்கள் சான்று பகிர்கின்றன. 19ஆம் திருத்தம் சாதிக்க விளைந்த முக்கியமான இரண்டு விடயங்களைப் பற்றி மட்டுமே இந்தப் பத்தி கவனம் செலுத்துகின்றது. ஒன்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல். இரண்டு சுயாதீனமாகப் பொதுத் தாபனங்கள் மற்றும் நீதித்துறை இயங்குவதற்குரிய ஏற்பாடுகளைக் கொண்டுவரல்.

18ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலங்களை வரையறை அற்றதாக்கிய மஹிந்த ராஜபக்ஷவின் அரசியலமைப்புத் தலையீட்டை செயலற்றதாக்கி மீண்டும் இரண்டு பதவிக் காலங்களுக்கு மட்டுமே ஜனாதிபதி ஒருவர் பதவி வகிக்க முடியும் என 19ஆவது திருத்தம் 1978இல் பழைய ஏற்பாடுகளை மீளக் கொண்டு வந்துள்ளது. இதனைத் தவிர 19ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பெரிதளவில் குறைத்திருக்கின்றது என்று சொல்லுவதற்கு இல்லை என்பதே எனது கருத்து.

19ஆவது திருத்தத்தின் முதல் வரைபுகளில் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பிரதமர் பிரயோகிப்பதற்கான ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால், இவற்றை நிறைவேற்றுவதற்கு பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்ததால் இந்தப் பிரிவுகளும் இறுதியில் திருத்தத்தில் இடம்பெறவில்லை.

ஜனாதிபதி அமைச்சரவையை நியமிக்கும் போது பிரதமரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி 19ஆம் திருத்தத்தில் இடம் பிடித்திருக்கின்றது. இது ஆரம்பத்தில் மஹிந்த சார்பு சுதந்திரக் கட்சியால் நிராகரிக்கப்பட்டிருந்தாலும் இறுதி வரைபில் இடம்பெறுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். இலங்கையின் அரசியலமைப்பு மரபில் அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் அதிகாரம் குறைந்த ஒருவரின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்பட வேண்டும் என்ற வாசகத்திற்கு பெரியளவில் மதிப்பில்லை. உதாரணமாக, மாகாண சபைகளைக் கலந்தாலோசித்தே அரச காணிகளைப் பகிர வேண்டும் என்று 13ஆம் திருத்தம் சொல்கின்றது. ஆனால், இந்தப் பிரிவு மதிக்கப்படுவதில்லை. ஆலோசனை கேட்டாலும் ஆலோசனை வழங்கியவரின் பேச்சுப்படி நடக்க வேண்டியதில்லை என்பது தான் இலங்கையின் அரசியலமைப்பு மரபாக இருக்கின்றது. நேரடியாக ஜனாதிபதி தெரிந்தெடுக்கப்படுவதாலும் நிறைவேற்றுத் துறை அதிகாரங்களின் உறைவிடமாக அரசியலமைப்பு ஜனாதிபதியை இனங்காணுவதாலும் பிரதமரின் ஆலோசனையை ஜனாதிபதி எவ்வளவு தூரம் கேட்டு நடக்க வேண்டும் என்ற அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் சந்தேகப்படுவதற்கு காரணங்கள் உண்டு. ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற வேளையில் ஜனாதிபதி ஒத்துழைக்க தீர்மானித்தால் அன்றி ஜனாதிபதியின் அதிகாரங்களை இந்த பிரதமரின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்ற விதி குறைக்காது என்றே தோன்றுகின்றது.

**19ஆம் திருத்தம் சாதிக்க விளைந்த முக்கியமான விடயங்கள் இரண்டு. ஒன்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல். இரண்டு சுயாதீனமாகப் பொதுத் தாபனங்கள் மற்றும் நீதித்துறை இயங்குவதற்குரிய ஏற்பாடுகளைக் கொண்டுவரல்.**

ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கட்சியினராக இருந்தால் ஆலோசனை கேட்டல் என்ற பிரச்சினை எழாது.

19ஆவது திருத்தம் மூலம் பதவியில் இருக்கும் ஜனாதிபதி ஒருவருக்கெதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர முடியாதென்ற நிலை 19ஆவது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டிருக்கின்றது. என்னைப் பொறுத்த வரையில் இந்த ஒரு விடயத்தைத் தவிர 19ஆவது திருத்தம் செய்திருப்பதெல்லாம் மஹிந்த ராஜபக்ஷவின் 18ஆம் திருத்தம் மூலமான அரசியலமைப்புத் தாக்கத்தை நீக்கி மீண்டும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் மூல அரசியலமைப்பிற்கு அழைத்துச் சென்றுள்ளமையே அன்றி அடிப்படையில் 1978 அரசியலமைப்பிலோ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிலோ பெரிதளவில் 19ஆவது திருத்தம் தாக்கம் செலுத்தாது. ஆகவே, 18ஆவது திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு 1978இல் மூல அரசியலமைப்பில் இருந்த ஜனாதிபதி இப்போது மீள நிலை நிறுத்தப்பட்டிருகிறார். 18ஆவது திருத்தத்தை மஹிந்த ராஜபக்ஷ கொண்டு வருவதற்கு முன்னரே ஜனாதிபதி முறை மோசமான முறைமையாக அடையாளங் காணப்பட்டிருந்தமையை நாம் மறந்து விடக் கூடாது. இந்த நாட்டில் ஜனநாயக அரசியல் இல்லாமைக்குக் காரணம் மஹிந்த ராஜபக்ஷதான் என்று பார்ப்பது அரசியல் மறதியோடு கூடிய குறுங்காலச் சிந்தனைக் குறைபாடு எனக் கருதுகிறேன்.

19ஆவது திருத்தைக் கொண்டுவந்தவர்களது மற்றுமொரு முக்கிய நோக்கம் 2001இல் 17ஆம் திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு அவையை மீள்கொணரல். இந்த அரசியலமைப்பு அவையின் உருவாக்கமானது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட ஒரு காத்திரமான முயற்சியாகும். ஜனாதிபதியின் நியமன அதிகாரங்களில் பலவற்றை ஜனாதிபதியிடமிருந்து எடுத்து பல்வேறு கட்சிகளும் சேர்ந்து நியமிக்கும் நிபுணர்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு அவையிடம் இந்த அதிகாரங்களை வழங்குவதே 17ஆம் திருத்தத்தின் சாரம். இந்த ஏற்பாடு ஜே.வி.பி. பொது சன ஐக்கிய முன்னணி கூட்டாட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. அதனைச் செயலிழக்கச் செய்வதில் பெரும் பங்காற்றியவர் இன்று பலராலும் நல்லாட்சிக்கான உறைவிடமாகக் கருதப்படும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க காலத்திலேயே

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**13.04.2015 –19.05.2015**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

உடன் பிறந்தவர்களுக்கு பண உதவி செய்வீர்கள். நல்லோரின் ஆலோசனை புதிய பாதையில் செயல்பட வைக்கும். வாகன பயன்பாடு சீராக இருக்கும். புத்திரரின செயல்குறையை சரி செய்வீர்கள். இல்லறத் துணை கூடுதல் அன்பு, பாசம் கொள்வார். தொழில் சார்ந்த இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்களுக்கு பணச் செலவு அதிகரிக்கும்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

போக்குவரத்தில் கவனநடை பின்பற்றவும். புத்திரரின் உடல் நலத்திற்கு சிகிச்சை உதவும். எதிர்ப்புகள் வந்த வழியே திரும்பி விடும். இல்லறத் துணை பாசத்துடன் உதவுவார். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர், கடமையை உணர்ந்து செயல்படவும், பெண்கள் சேமிப்பு பணத்தை பயன்படுத்துவர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அரசு சார்ந்த உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரரின் எண்ணங்களை ஏற்றுக்கொள்வீர்கள். பணக்கடனில், ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் உடல்நலம் ஆரோக்கியம் பெறும், தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் பணம் சேமிப்பர். பெண்கள், குடும்ப உறுப்பினர்களை நன்கு உபசரிப்பர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

உடல் நல ஆரோக்கியம் சிறப்பாக அமைந்திடும். இல்லறத் துணை வழி சார்ந்த உறவினர்களால் உதவி உண்டு. தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர், கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள், புத்தாடை, ஆபரணம் வாங்க அனுகூலம் உண்டு.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில் வியாபாரத்தில் நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். பணியாளர் பணியிட சூழல் உணர்ந்து பணிபுரியவும். பெண்கள் மனதில் புதிய ஞானம் பெறுவர்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

எதிர்மனப்பாங்கு உள்ளவர் உதவி பெற முயற்சிப்பார். இல்லறத் துணையின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். பணியாளர், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றவும். பெண்கள் அதிக பயன்தராத பொருள் வாங்க வேண்டாம். மாணவர்கள் கலை பயில்வதில் ஆர்வம் கொள்வர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். வாகன பயணம் இனிதாக அமையும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமை கொள்வார். தொழில் சிறக்க, புதியவர்களின் வருகை துணை நிற்கும். பணியாளர் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்களுக்கு, தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

எதிர்மறையாக இருந்த சில விஷயம் விலகும். இல்லறத்துணையின் சொல்லும், செயலும் நன்மையைத் தரும். தொழிலில், அபிவிருத்தி பணி புரிவீர்கள். பணவரவு திருப்திகரமாகும். பணியாளர்களுக்கு சலுகை, சன்மானம் அதிகரிக்கும். பெண்கள், மனக்கவலையை மறந்து, குடும்ப நலனில் கவனம் கொள்வர்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

காலமுறை உணவுப்பழக்கம், சீரான ஓய்வு, உடல்நலத்தை பாதுகாக்க உதவும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களை குற்றம் சொல்ல வேண்டாம். தொழில் சார்ந்த இடையூறை, தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள், பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம். பெண்கள், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**மகரம்**

**திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இல்லறத்துணை, குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழிலில், உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர், கால அவகாசத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள், பணப்பொறுப்பை ஏற்க வேண்டாம். மாணவர்கள், மன்னிக்கும் மனப்பாங்கு கொள்வர்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

. இல்லறத்துணையுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், பணிச்சுமை கூடும். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பு திருப்திகர அளவில் சன்மானம் பெறுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் கவனம் கொள்வர். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

**மீனம்**


**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரர், வேத சாஸ்திர அறிவில் மேம்படுவர். எதிர்ப்பாளரிடம் இருந்து விலகவும். இல்லறத்துணை சொந்தங்களின் உதவியை பெறுவார். தொழில், வியாபாரம், வளர்ச்சிப்பாதையில் செயல்படும். பணியாளர் அதிக தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள், சிக்கன செலவில் பணம் சேமிப்பர். மாணவர்கள், தனித்திறனை வளர்த்துக் கொள்வர்.

# சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு **85**

அடேல் பாலசிங்கம்



## உறவில் நிகழ்ந்த பாதிப்புகள்

இந்திய ஆதரவுடன் 1985 ஒகஸ்டில் இடம்பெற்ற திம்புப் பேச்சுவார்த்தை இலங்கை அரசுக்கும் தமிழ்ப்போராளிக் குழுக்களுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தியது. ஆயினும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கொண்டு வந்து விடலாம் என்ற முயற்சியை இந்தியாவும் கைவிடுவதாக இல்லை. இந்திய அமைச்சர்களும் அதிகாரிகளும் கொழும்புக்குப் பல பயணங்களை மேற்கொண்டார்கள். சிறிலங்காவின் அரசியல் யாப்பு மாற்றங்கள் தொடர்பான கருத்துக்களையும் பரிந்துரை களையும் வகுப்பதும் திருத்துவதுமாக இருந்தார்கள். அதே சமயம் புதுடில்லிக்கும் , புலிகளுக்கும் இடையே 1983 இற்கு முன் நிலவிய உறவின் சுமூக நிலை அதற்குப் பின் என்றுமே மீண்டதில்லை. திம்புப் பேச்சுவார்த்தை முறிவடைந்ததில் இந்தியாவுக்குக் கசப்பு. பாலாவை நாடு கடத்தியதாலும் கொழும்புடன் புதுடில்லி கூடிய உறவு பேணியதாலும் இந்தியா மட்டில் விடுதலைப்புலிகளுக்கு கசப்பு. தமிழ் நாடு காவல்துறையானது பிரதிக்காவல் மா அதிபர் மோகன்தாஸ் தலைமையில் 1986 நவம்பர் நடத்திய பாரிய பாதுகாப்பு நடவடிக்கையை அடுத்து, தமிழ் நாட்டின் ஆதரவிலும் புதுடில்லியின் ஆதரவிலும் தாம் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது என்பதை விடுதலைப்புலிகளும் ஏனைய போராளிக் குழுவினரும் புரிந்து கொண்டார்கள்.

தமிழ்ப் போராளிக் குழுக்களின் உறுப்பினர்கள் அதிகமதிகமாகப் புலனாய்வு அதிகாரிகளையும் அச்சமடையச் செய்திருந்தது. விடுதலைப் புலிகள் உயர்வான ஒழுக்கக் கட்டுப்பாடுகளை பேணியதோடு பொதுமக்களுடன் நல்லுறவு பேணிக் கொண்டிருந்த போதிலும் ஏனைய ஆயுதக் குழுக்கள் புரிந்த வன்செயல் சம்பவங்கள் மாநிலக் காவல்துறைக்கு எரிச்சலூட்டியது. சென்னையின் மையப் பகுதியான சூளைமேட்டில் 1986 நவம்பர் முதல் திகதியன்று ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சிறிலங்கா அரசில் பின்னர் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அப்போது ஈ.பீ.ஆர்.எல்.எவ்.இன் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்தார், அவருக்கும் ஓட்டோ வண்டி ஓட்டுனர் ஒருவருக்கும் இடையே ஒரு சில்லறைத் தகராறு. அதில் டக்ளஸ் தேவானந்தா தானியங்கி துப்பாக்கியால் சிலாவிச் சுட இளவயது வழக்கறிஞர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியாகியிருக்கிறார். பல பொதுமக்கள் காயமடைந்திருக்கிறார்கள், இதன் விளைவாக தமிழ் நாட்டிலே பலத்த கண்டனம் கிளர்ந்தது. கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊடகங்கள் நிர்பந்திருந்தன.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தமாக இசை கேட்டால் செவித் திறன் பாதிக்கும்

ஒரு நாளில் ஒரு மணி நேரத்திற்கு மேல் இசையை கேட்பதால் கேட்கும் திறன் பாதிப்படைவதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. ஆகவே ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு மேல் இசையை கேட்பதை தவிர்க்குமாறு அந்த நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

அதிக சத்தத்துடன் இசை கேட்டால் செவித் திறன் பாதிக்கும் இசையை அதிகமாகவும் பெரிய சத்தமாகவும் கேட்பதால் 1.1 பில்லியன் இளைஞர்கள் தமது கேட்கும் திறனை நிரந்தரமாக இழக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

ஆடியோ பிளேயர்கள், இசைநிகழ்ச்சிகள் மற்றும் மதுபானசாலைகள் என்பனவும் கூட கடுமையான அச்சுறுத்தலாக உள்ளன.

12 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 43 மில்லியன் பேர் கேட்கும் திறனை இழக்கும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

பணக்கார மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் உள்ள இந்த வயது கட்டமைப்பிற்குள் உள்ளவர்களில் 50 வீதமானோர் தமது தனிப்பட்ட ஆடியோ சாதனங்களில் பாதுகாப்பற்ற அளவுகளில் சத்தத்தை கேட்பதாகவும் உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

பதின்ம வயதினரின் கேட்கும் திறன் குறித்து ஐக்கிய அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வில் 1994 இல் 3.4 வீதமானவர்கள் கேட்கும் திறனை இழந்திருந்ததுடன் அது 2006 இல5.3 வீதமாக அதிகரித்துக் காணப்பட்டது.

இசையை கேட்கும் போது ஒரு மணித்தியாலத்திற்கு குறைந்த நேரம் கேட்பதுடன் ஒலி அளவை குறைத்துக் கேட்டால் சத்தத்தால் செவிப்புலனுக்கு ஏற்படும் பாதிப்பை தடுக்க முடியும் என்பதே இந்த ஆய்வின் சாராம்சமாக உள்ளது.



# 19 சாதித்தது...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். ஓர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை முழுமையாக ஒதுக்கிச் செயற்பட்டார் சந்திரிக்கா. அரசியலமைப்புக்கு உண்மையில் இலங்கை அரசியலில் இருக்கும் மதிப்பு அவ்வளவு தான். 13, 17ஆம் திருத்தங்களை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இலகுவில் முழுமையாக ஒதுக்கி செயற்படக் கூடியதாகவிருந்தமை, (இருக்கின்றமை) இலங்கையை அரசியலமைப்பு ஜனநாயகமா கருதலாமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கை வெறுமனே ஒரு தேர்தல் ஜனநாயகம் என்ற முடிவுக்கு இட்டுச் செல்கின்றன. சந்திரிக்கா அம்மையாரின் இந்த அணுகுமுறையை அவர் வழி பின்பற்றி பின்னர் 17ஆவது திருத்தத்தை 18ஆவது திருத்தத்தின் மூலம் முற்றாக ஒழித்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. 19ஆவது திருத்தத்தின் மூலம் இந்த அரசியலமைப்புச் சபையை மீளக் கொண்டுவருவதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், இவ்விடயத்தில் மஹிந்த சார்பு சுதந்திரக் கட்சியினர் நாடாளுமன்றிற்கு வெளியிலிருந்து தெரிவு செய்யப்படும் நிபுணர்களிடம் இந்த அதிகாரங்களை வழங்குவதை எதிர்த்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களே அரசியலமைப்பு அவையில் இருக்க வேண்டுமென்று விடாப்பிடியாக இருந்தனர். இந்த அழுத்தத்திற்கு விட்டுக்கொடுத்து அரசியலமைப்பு அவையில் 10இல் 7 உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் வண்ணம் 19ஆவது திருத்தத்தின் அரசியலமைப்பு அவை மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றமானது ஜனாதிபதியிடமிருந்த நியமன அதிகாரங்களை தற்போது நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்துள்ளது. முடிவில் 17ஆம் திருத்த அரசியலமைப்பு அவையும் 19ஆவது திருத்த அரசியலமைப்பு அவையும் முற்றிலும் வேறுபட்டவை என்பதே உண்மை. கட்சி அரசியல். சார்பற்ற நியமன முறையை முக்கிய ஆணைக்குழுக்களும் நீதித்துறைக்கும் செய்யும் முயற்சி தோல்வியடைந்து விட்டதென்றே கூற வேண்டும்.

சிறுபான்மை அரசொன்று விட்டுக்கொடுப்புக்களின்றி 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றியிருக்க முடியாது என்று கூறப்படுகின்றது. ஆனால், மாற்றுபாயமொன்று இருந்தது. 2ஆம் வாசிப்பின் மீதான 2/3 பெரும்பான்மையுடனான வாக்களிப்போடு நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு 3ஆம் வாசிப்பினைப் புதிய நாடாளுமன்றின் மூலம் நிறைவேற்றியிருக்கலாம். திருத்தங்கள் செய்யப்பட்டது குழுநிலை வாதத்தின் போதே. இரண்டாம் வாசிப்பின் போது திருத்தப்படாத 19ஆவது திருத்தத்தின் மீதே வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. ஆனால், இதனை சிறிசேனவோ ரணிலோ செய்ய விரும்பவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் கீழ் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைக் குறைப்பேன், சுயாதீன பொது ஆணைக்குழுக்களின் இயங்குதலை உறுதிப்படுத்துவதன் மூலம் நல்லாட்சியை கொண்டு வருவேன் என்பது தான் மைத்திரிபால சிறிசேனவின் பிரதான தேர்தல் கோஷமாக இருந்தது. ஆனால், உண்மையில் மக்கள் சிறிசேனவுக்கு வாக்களித்தது குடும்ப ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரத்தான். அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் பெரிதாக வாக்காளர்கள் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. எனினும், 19ஆவது திருத்தத்தை கொண்டு வருவதாக உறுதியளித்திருந்த சிறிசேனவுக்கு இத்திருத்தத்தை நாடாளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்றுவது அவரது அரசியல் ஆளுமைக்கு முக்கிய சோதனையாக கருதப்பட்டது. 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றாமல் 100 நாள் திட்டம் முழுமையான தோல்வி கண்டுவிட்டது என்ற நிலையிலிருந்து பொதுத் தேர்தலைச் சந்திக்க ரணில் விக்கிரமசிங்கவும் விரும்பவில்லை. ஆகவே, எப்பாடுபட்டேனும் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது என்ற முடிவுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணங்கியிருந்தனர்.

இதற்காகத்தான் பல விட்டுக்கொடுப்புக்கள் செய்யப்பட்டிருந்தன. மேலே சொல்லப்பட்ட விட்டுக்கொடுப்புக்களுக்கு மேலதிகமாக 19ஆவது திருத்தத்தை நிறைவேற்ற உதவினால் தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பிலான 20ஆவது அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தை கொண்டு வர அனுமதிப்பேன் என்று சிறிசேன சுதந்திரக் கட்சிக்கும் ஹெல உறுமயவிற்கும் கொடுத்த வாக்குறுதி ஆபத்தானவோர் விட்டுக்கொடுப்பு. தேர்தல் மறுசீரமைப்பை சுதந்திரக் கட்சி மற்றும் ஹெல உறுமய வலியுறுத்தி வருவதற்கான காரணங்களை முன்னைய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தேன். 20ஆவது திருத்த வரைபு முற்று முழுதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் வரையப்பட்ட ஒன்றாகும். அந்த வரைபையே அமைச்சரவையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது என அறியக்கிடைக்கின்றது. இவ்வரைபானது கூடுதலாக தொகுதி வாரி பிரதிநிதித்துவம் மேலோங்கும் ஒரு கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்தப் பார்க்கிறது. எண்ணிக்கையில் குறைவான சமூகங்களுக்கு இத்தேர்தல் முறை பாதகமாக இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி இத்திருத்தத்தை நிறைவேற்றாமல் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமென விரும்புகின்றது. சிறிசேன கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவே முயற்சிப்பார் என்று சொல்லப்படுகின்றது. ஆனால், 19ஆவது திருத்தத்தைத் தனது கட்சியினர் நிறைவேற்ற போட்ட முட்டுக்கட்டைகளால் அவர் ஆத்திரமடைந்திருக்கக் கூடும். அதேவேளை, சுதந்திரக் கட்சி பிளவுபட்டிருக்கும் போது தேர்தலுக்குப் போக அவர் விரும்ப மாட்டார் என்றே தோன்றுகின்றது. தேர்தலை செப்டெம்பரில் ஜெனிவா அறிக்கை வருவதற்கு முதல் நடத்தி முடித்துவிட வேண்டும் என்பதில் சிறிசேன, ரணில், மேற்குலகம், இந்தியா விரும்புவதால் விரைவில் தேர்தல் வருவது உறுதி.

இறுதியாக ஒரு விடயம். மங்கள் சமரவீர 19ஆவது திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் தேர்தலில் ஐ.தே.க. வெற்றி பெற்றால் 3ஆவது குடியரசு அரசியலமைப்பைக் கொண்டு வருவோம் என்றும், இனப் பிரச்சனைக்கு அவ்வரசியலமைப்பு தீர்வு காணும் எனவும் கூறியுள்ளார். ஐ.தே.க. தமக்கு அரசியல் தீர்வு காண்பதில் உண்மையான அக்கறை உள்ளதை வெளிப்படுத்த ஒரு வழியுண்டு. ஒற்றையாட்சியல்லாத அரசியலமைப்பு முறையொன்றை ஆட்சியமைத்தால் ஐ.தே.க. அரசியற் தீர்வாக முன் வைக்குமென சிங்கள் மக்கள் முன் தேர்தல் விஞ்ஞாபனம் முன் வைத்து வெற்றி பெற்று வர வேண்டும். தமிழ் மக்களுக்கு இந்த 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட வகைமுறை கூறும் செய்தியொன்று உண்டு. நல்லாட்சிக்கான நிறுவன மறுசீரமைப்பிற்கே தென்னிலங்கை அரசியல் காட்டும் முதிர்ச்சி இது தான் என்றால், வெளித் தலையீடின்றி தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கும் ஆற்றல் தென்னிலங்கை அரசியலுக்கு இப்போதைக்கு கிடையாது என்பதே அது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பெண்ணும் தாங்கள் விரும்பும் ஆண்கள் பல விடயங்களை தமக்காக செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அவர்கள் எதிர்பார்ப்பது போல் ஆண்களின் செயற்பாடுகள் அமையும்போது பெண்களின் மகிழ்வுக்கு அளவேயிருப் பதில்லை. ஆனால் எதிர்பார்ப்புக்கு முரணான விடயங்கள் நடைபெறும்போதுதான் குடும்ப பெண்களின் கோப, எதிர்மறையான எல்லா உணர்வுகளும் அவர்களின் மாதவிடாய் காலத்துடன் தொடர்பானவை அல்ல என்பதை புரிந்துகொள்பவர்களாக ஆண்கள் இருக்க வேண்டும்.

ஆண்கள் இரக்க உணர்ச்சியை முன்னேற்றிக்கொண்டால் நல்லது. ஆனால் அதற்காக கண்ணீர்விட்டு ல்லை. தாறுமாறாக ஒழுங் கீனமாக வாகனம் செலுத்தும் போது பெண்களை அதிகமாக தாக்குகிறது. அதனால் மிகவும் மெதுவாக வாகனத்தை செலுத்துங்கள்.

பெண்களுக்கு பாதுகாப்பாக இருங்கள். ஆனால் அவர்களை சொந்த உடமைகளாக கருதாதீர்கள்.

# ஆண்களிடம் பெண்கள் எதிர்பார்ப்பது என்ன?

வாழ்வில் பூகம்பங்கள் எழுகின் றன. பெண்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் அனைத்தையும் அவர்கள் சார்ந்த ஆண்களால் செய்ய முடியாத போதிலும் செய்யக் கூடிய விடயங்களையாவது நிறைவேற்றினால் அது குடும்ப வாழ்வின் மகிழ்வுக்கு வேர் விடுகின்றது என்பதை ஒவ்வொரு ஆண்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

சரி, ஆண்களிடமிருந்து பெண்கள் பொதுவாக எதிர்பார்க்கும் விடயங்கள் என்ன?

பெண்கள் ஏதேனும் ஒரு விடயம் குறித்து ஆண்களிடம் மனம் விட்டு பேசும்போது அதை ஆண்கள் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பதை விரும்புகின்றார்கள். இவ்வாறு கேட்டுகொண்டு அதற்கு ஏற்றாற்போல நடந்துகொண்டால் அவளது மன உணர்வை ஆண்கள் புரிந்துக் கொண்டதாக பெண்கள் நினைக்கின்றார்கள்.

அழ வேண்டும் என்பதில்லை. தனது துணையுடன் மேலும் உணர்வுபூர்வமாக நடந்துகொள்ள வேண்டும்.

பெண்களைப் பொறுத்தவரை தொடர்பாடலானது முக்கிய மானது. அதனால் அடிக்கடி பெண்களிடம் பேச வேண்டும்.

தனது கணவர் ஒரு மாதத்துக்கு ஒருதடவையேனும் தமக்கு சமைத்துக் கொடுக்க வேண்டும் என பெண்கள் விரும்புவர்.

இது பொதுவாக வழக்கத்துக்கு மாறானதுதான். ஆனால், இவ்வாறான ஆச்சரிய மூட்டும் விடயங்களினால் ஆண்களி டம் பெண்கள் அதிகம் விருப்பத்துக்குரியவர்களாக மாறுகின்றார்கள். அதே வேளை இவ்வாறான செயற்பாடுகள் பெண்களை மகிழ்ச்சியடைய செய்கின்றன.

ஆண்களே, உங்கள் துணிச்சல் நீங்கள் வாகனம் செலுத்தும் வேகத்தில்தான் தெரிய வேண்டும் என்றி

தமது ஆண் எப்போதும் தங்களிடம் தங்களது காதலை வெளிப்படுத்துவதை பெண்கள் விரும்புகின்றார்கள். ஆண்களை விட்டு பெண்கள் நீங்கும் தருணங்களில் அந்த அன்பை வித்தியாசமான வழிகளில் வெளிப்படுத்த வேண்டும் என்று அவர்கள் எதிர் பார்க்கின்றார் கள்.

ஆண்கள் விரும்பும் பெண்களை மிக வேகமாக இழப்பதற்கு ஒரு வழி பொய் சொல்வது.

ஆண்கள் மிக நேர்மை யாக இருப்பதையே பெண்கள் அதிகமாக விரும்புகின்றார்கள்.

வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் ஆண்க ளிட மிருந்து பெண்கள் அதிகமாக எதிர் பார்க்கின்றார்கள்.

விடுமுறை நாள்களில் கணவர் வீடுகளில்இருக்கும்போதுவேலைகளை பகிர்ந்து கொண்டு செய்வதை பெண்கள் அதிகமாக விரும்புகின்றார்கள்.

## பெண்ணின் மனது



பெண்ணின் மனது
ஆழம் என்கிறார்கள்...
பெண்களை
புரிந்து கொண்டால்...
அவர்கள் எல்லாம்
கவிதைதான்...
நிலவும் பெண்ணும்
ஒன்றுதான் என்கிறார்கள்...
நிலவுக்கு
தேய்பிறை உண்டு...
பெண்ணவள் மனதில்
நினைத்துவிட்டாள்...
தேய்பிறை இல்லை
அவள் மனதில்...

வளர் பிறையே...
என்றும் விண்ணில்
மின்னும் விண்மீனாக...
பெண்கள் அடிமைதான்
அதிகாரத்துக்கு அல்ல...
உண்மை அன்புக்கே...

ஆண்கள் முகம் பார்க்கும்
கண்ணாடி அல்ல...
பெண்கள் ஒரு
நாட்டின் கண்கள்...
புரியாத
புதிரும் அல்ல...
அவர்களை
புரிந்து கொண்டால்...
வாழ்வில்
கவலையும் இல்லை...
புது கவிதைதான்
பெண்கள்...
படித்து பார்க்க முயற்சி
செய்யுங்கள்...
ஒரு முறையேனும்.....

## உறைந்த நினைவுகள்



நிரூபர் : உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக் கிறீங்க?

நடிகை : நிகழ்காலக் கணவரை விட நல்லவரா இருக்க வேண் டும் என்று நினைக் கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கே ஆப்பா?

- வேல்தர்மா



2015 ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவின் ரெக்ஸஸ் மாநிலத்தில் கார்லண்ட் நகரில் நபிகள் நாயகத்தைக் கேலிச் சித்திரமாக வரையும் போட்டி நடக்கும் இடத்தில் ஒரு தீவிரவாதத் தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதல் தோல்வியில் முடிந்ததாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்தத்தாக்குதலைத் தாமே செய்ததாக ஐ. எஸ் அமைப்பு இரண்டு நாள்கள் கழித்து உரிமை கோரியுள்ளது. இந்தத் தாக்குதல் ஐ.எஸ் அமைப்பின் வலிமையை அல்லது வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. ஆனால் இந்தத் தாக்குதல் அமெரிக்காவில் ஐ. எஸ் அமைப்பு வேரூன்றியுள்ளது என்பதற்கான அறிகுறியல்ல என்கின்றது அமெரிக்கா. ஆனால் அமெரிக்காவில் நடந்த ஒரு தீவிரவாதத் தாக்குதலுக்கு முதல் முறையாக ஐ. எஸ்.அமைப்பு உரிமை கோரியுள்ளமை கவனிக்கத் தக்கது. ஆனால் தமக்குத் தெரியாமல் நடந்த தாக்குதல்களுக்குக் கூட தீவிரவாத அமைப்புக்கள் உரிமை கோருதல் வழக்கம் என்கின்றது அமெரிக்கா.

கேலிச்சித்திரம் வரையும் போட்டி நடந்த இடத்துக்கு 'ரைபிள்'களுடனும் கவசங்களுடனும் எல்டன் சிம்சன் என்பவரும் நதிர் சூஃபி என்பவரும் தாக்குதல் நடத்தச் சென்றனர். இப்படி ரைபிள் எடுத்துத்துச் சென்று தாக்குதல் நடத்துவது அமெரிக்காவில் ஓர் இலகுவான செயல். ஆனால் முஹம்மது நபி தொடர்பான கேலிச் சித்திரப் போட்டி ஓர் ஆத்திரமூட்டும் செயல் என்பதை உணர்ந்த அமெரிக்கக் காவற்துறை அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. SWAT எனச் சுருக்கமாக அழைகப்படும் Special Weapons And Tactics பாதுகாப்புப் பிரிவு அங்கு பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தது. இந்தப் பிரிவினர் வழமையான காவற்துறையினர் வைத்திருக்கும் படைக்கலன்களிலும் பார்க்க சிறந்த படைக்கலன்களை வைத்திருப்பர். அத்துடன் மறைந்திருந்து தாக்கக் கூடிய தொலைநோக்கிகளுடன் கூடிய துப்பாக்கிகளையும் வைத்திருப்பார்கள். தாக்குதலுக்குச் சென்ற எல்டன் சிம்சனும் நதிர் சூஃபியும் காவலுக்கு இருந்த ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள். ஆனால் இவர்கள் இருவரையும் மற்றக் காவலாளிகள் சுட்டுக் கொன்று விட்டனர். இந்தத் தாக்குதல் பலர் சம்பந்தப்பட்ட ஒரு பெரிய திட்டமிட்ட தாக்குதல் அல்ல.ஒரு தனி ஓநாய் பாணித் தாக்குதல் (Own lone wolfdstyle strike) என்றும், இந்தத் தாக்குதலுக்கும் ஐ.எஸ் அமைப்பின் தலைமைக்கும் தொடர்பு இல்லை என அடித்துச் சொல்கின்றது அமெரிக்க அரசு.

ரெக்ஸஸ் மாநிலத்தின் கார் லண்ட் நகரில் தமது போராளிகள் இருவர் தாக்குதல் நடத்திய தாக சிரியாவிலும் ஈராக்கிலும் பெரு நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஐ.எஸ். அமைப்பு தமது வானொலி மூலம் தெரிவித்துள்ளது. அல்லாவின் ஆணைப்படி அவர்கள் தாக்குதல் நடாத்தியதாக தெரிவிக்கின்றனர். இது போல இறைநம்பிக்கை அற்றவர்களை எல்லா இஸ்லாமியப் போராளிகளும் கத்திகளால் குத்தியோ, வாகனங்களால் மோதியோ பள்ளங்களில் தள்ளி வீழ்த்தியோ கொல்ல வேண்டும் என்கின்றது ஐ.எஸ் அமைப்பு. இனிவரும் காலங்களில் அமெரிக்காவில் தமது போராளிகள் நடத்தும் தாக்குதல் மேலும் மோசமாக இருக்கும் என்றும் ஐ.எஸ் அமைப்பு எச்சரித்துள்ளது.

**கேலிச்சித்திரம் வரையும் போட்டி நடந்த இடத்துக்கு 'ரைபிள்'களுடனும் கவசங்களுடனும் எல்டன் சிம்சன் என்பவரும் நதிர் சூஃபி என்பவரும் தாக்குதல் நடத்தச் சென்றனர். இப்படி ரைபிள் எடுத்துத்துச் சென்று தாக்குதல் நடத்துவது அமெரிக்காவில் ஓர் இலகு வான செயல். ஆனால் முஹம்மது நபி தொடர்பான கேலிச் சித்திரப் போட்டி ஓர் ஆத்திரமூட்டும் செயல் என்பதை உணர்ந்த அமெரிக்கக் காவற்துறை அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது.**

இரு தாக்குதலாளிகள் செய்த தாக்குதலைத் தொடர்ந்து கேலிச் சித்திரப் போட்டியை ஒழுங்கு செய்த பமிலா கெல்லர் பேச்சுரிமையில் இருந்து இஸ்லாமிய மதத்துக்கு விலக்கு கொடுக்க முடியாது என்றார். இவர் இப்படி ஒரு போட்டியை ஒழுங்கு செய்ய இடத்தைத் தேர்தெடுத்ததை அறிந்த கார்லண்ட் நகரத்தில் வாழும் இஸ்லாமியர்கள் அதை உதாசீனம் செய்வதே சிறந்த வழி என்று எந்த வித எதிர்ப்பையும் காட்டவில்லை. போட்டியில் வெற்றி பெறுபவருக்கு 12,500டொலர் பரிசு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. டலஸ் பிரதேச இஸ்லாமியத் தலைவர் பமிலா கெல்லர் இனக் குரோதத்தைத் தூண்டுவதற்கு இஸ்லாமியர்களுக்குத் தூண்டில் போடும் நடவடிக்கையே இந்த கேலிச் சித்திரப் போட்டி என்றார். சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட உள்ளூர் மெதடிஸ்த கிறிஸ்தவத் தலைவர் பேச்சுரிமை என்ற பெயரில் பமிலா இனக்குரோதத்தை வளர்க்கின்றார் என்றார். 52 வயதான பமிலா கெல்லர் இஸ்லாமிய மதத்துக்கு எதிரான குரோதத்தை வளர்க்கும் ஒரு இணையத்தை நடத்தி வருகின்றார். இவர் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அவரது தந்தைக்கு அல்லாமல் மல்கம் எக்ஸ் என்பவருக்குப் பிறந்தவர் என்றும் அவர் இளைஞராக இருந்த போது ஒரு இஸ்லாமியராக இருந்தார் என்றும், ஒரு விலைமாதுடன் தொடர்பு வைத்திருந்தவர் என்றும் பரப்புரைகள் செய்தவர்.

அமெரிக்காவின் சில மாநிலங்கள் வெளிநாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை அடிப்படையாக வைத்து உள்நாட்டு நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குவதைத் தடை செய்துள்ளன. சில நீதிபதிகள் இதனால் ஷரியாச் சட்டத்தை அடிப்படையாக வைத்துத் தீர்ப்புக்கள் வழங்குவதாகக் கருதப்படுகின்றது. ரெக்ஸஸ் மாநில சட்ட சபையும் இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. இப்படிப்பட்ட சட்டத்தை ஆதரிப்போர் இந்தச்சட்டம் இஸ்லாமிற்கு எதிரானது அல்ல என்றும் பொதுவாக வேற்று நாடுகளின் வேற்று மதங்களை அடிப்படையாக வைத்து அமெரிக்க நீதி மன்றங்கள் தீர்ப்பு வழங்குவதைத் தடுப்பதாகும் என்கின்றனர்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பரிஸ் நகரில் நடத்தப் பட்ட தாக்குதலுக்கும் ரெக்ஸஸ் மாநிலத்தின் கார்லண்ட் நகரில் நடத்தப் பட்ட தாக்குதலுக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதாகவும் கருதப்படுகின்றது. ஆனால் அமெரிக்காவில் ஐ.எஸ் அமைப்பு பயிற்சிகளையோ அல்லது பாசறைகளையோ வைததிருக்க முடியாது என்கின்றது அமெரிக்க அரசு.

31 வயதான எல்டன் சிம்சன் தாக்குதலுக்கு 20 நிமிடங்களுக்கு முன்னர் தன்னை ஒரு புனிதப் போராளியாக அல்லா ஏற்றுக் கொள்வார் என தனது டுவிற்றரில் பதிவிட்டுள்ளார்.






எல்டன் சிம்சன் என்பவரும் நதிர் சூஃபி என்பவரும் நடத்திய தாக்குதலுக்கும் ஐ .எஸ் அமைப்புக்கும் நேரடித் தொடர்பு இல்லை என அமெரிக்கா அடித்துச் சொன்னாலும் இரண்டு அம்சங்களை இங்கு உறுதியாகச் சொல்லலாம்:

1. அமெரிக்காவின் பல்வேறு உளவுத் துறை அமைப்புக்களால் எல்லாத் தீவிரவாதத் தாக்குதல்களையும் முன் கூட்டியே அறிய முடியாது.

2. ஐ .எஸ் அமைப்புக்கும் ரெக்ஸஸ் தாக்குதலுக்கும் நேரடித் தொடர்பு இல்லாவிடினும் இஸ்லாமியத் தீவிரவாதம் அமெரிக்காவையும் ஊடறுக்கக் கூடியது.

எனவே அமெரிக்காவுக்கான அடுத்த எச்சரிக்கை மணி அடித்துவிட்டது என்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்



# பூச்சி உருண்டைகளைப் பயன்படுத்துவது எவ்வாறு?

**அ**வள் துடித்துப் பதைத்து ஓடிவந்தது நியாயம்தான். ஒரு தாய்க்கு தன் குழந்தையின் உயிர் பற்றிய பயமும் பதகளிப்பும் இல்லாமல் போய்விடுமா. தாயின்



பதற்றத்தைப் புரிந்துகொள்ளாமல் சிரித்தபடி நின்றாள் மகள். பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் அந்த வயதில் இருக்கப் போவதில்லையே!!

பிரச்சினை பூச்சி உருண்டை வடிவில் வந்தது.

பூச்சி உருண்டை எனச் சொல்லப்படும் இவை பளிச்சிடும் வெள்ளை நிற உருண்டைகளாகும். Naphthalene balls, moth balls என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இவை பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இனிப்பு வகைகள் போன்ற தோற்றம் கொண்டதால் வாயில் போட்டுவிடலாமா என எண்ணத் தோன்றும்.

மசகு எண்ணெய் மற்றும் நிலக்கரித் தாரிலிருந்து இவற்றைத் தயாரிப்பார்கள். சிகரட் புகையிலும் இது இருக்கிறது. வாகனங்கள் உமிழ்ந்தெறியும் புகையிலும் இருக்கவே செய்கிறது.

பொருள்களையும் உடைகளையும் சேமித்து வைக்கும் அலுமாரி, பெட்டி போன்றவற்றில் பூச்சி கொல்லியான இதைப் போட்டு வைப்பார்கள். பல உணவகங்களிலும் கழிப்பறைகளிலும் வாஷ் பேசினில் போட்டு வைத்திருப்பதையும் காணலாம். இதிலிருந்து எழும் மணமானது கரப்பொத்தான் மற்றும் சிறுபூச்சிகளை வெருட்டி அடிக்கும். மணத்தை எழுப்பும் இவை படிப்படியாகக் காற்றிலேயே கரைந்து அற்றுப் போகும்.

ஏனைய பூச்சி கொல்லிகளைப் போலவே இது மனிதர்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும். பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்படலாம்.

### பூச்சி உருண்டையை உட்கொண்டால்

ஆயினும் இதனை தற்செயலாகவோ வேண்டும் என்றே உட்கொண்டால் பாதிப்பு அதிகமாகும். பாதிப்பின் தீவிரம் உட்கொள்ளப்பட்ட நப்தலீனின் அளவைப் பொறுத்தது ஆகும்.

இரைப்பையை உறுத்துவதால் வயிற்று வலி, ஓங்களாம், வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் ஆரம்பத்தில் ஏற்படும். இவை தானே மாறிவிடக் கூடும்.

ஆயினும் அதிகளவில் உட்கொண்டால் கடுமையான பாதிப்பு ஏற்படும். இதற்குக் காரணம் நப்தலீன் ஆனது குருதியில் உள்ள செங்குருதிக் கலங்களைப் பாதித்து அவற்றைச் சிதைவடைய வைப்பதே ஆகும். அதிக இரத்தக் கலங்கள் அழியும்போது ஒரு வகை இரத்தசோகை ஏற்றபடும். இதை hemolytic anemia என்பார்கள். சிதைந்த இரத்தத்தின் ஹீமகுளோபினானது சிறுநீருடன் வெளியேறும். சிறுநீர் செந்நிறத்தில்; வெளியேறும்.

அதிகமாக உட்கொண்டிருந்தால் சிறுநீரகம் ஈரல் போன்ற உள்ளுறுப்புகள் பாதிப்புறும்.

நெப்தலீனால் குருதியில் உள்ள இரும்புக் கூறானது ferrous என்பதற்கு பதிலாக ferric ஆக மாறும். இரத்தத்தினால் உடலுக்குத் தேவையான ஒட்சிசனைக் குருதியால் காவிச் செல்ல முடியாது போய்விடும். உடல் நீலம் பாரிக்கும். methemoglobinemia என்ற இது மற்றொரு கடுமையான விளைவாகும். இந் நிலை தொடரும் போது உடலுக்கு வேண்டிய ஒட்சிசன் இல்லாமையால் வலிப்பும் மரணமும் தொடரலாம்.

நெப்தலீன் நச்சு பெரியவர்களை விட குழந்தைகளில் பாதிப்பை ஏற்படுவது அதிகம்.

உட்கொள்வதால் மாத்திரம் மட்டுமின்றி, அதன் மணத்தைச் சுவாசிப்பதாலும் குழந்தைகளில் பெரும் பாதிப்பு ஏற்படலாம். நப்தலீனால் மாசடைந்த உடைகள் படுக்கை விரிப்புகள் போன்றவற்றைத் தொடர்ந்து அணியும்போது அதன் நச்சுத்தன்மை சுவாசத்தின் ஊடாக உடலை அடைந்து, இத்தகைய பாதிப்புகளை பாலகர்களில் ஏற்படுத்தி இருப்பதாக சில அறிக்கைகள் கூறுகின்றன.

### ஏனைய பாதிப்புகள்


இதன் மணம் சிலருக்கு கண்களில் எரிவை உண்டாக்கும். கண்ணில் நேரடியாகப் பட்டால் கண்கள் சிவந்து நோய் conjunctivitis ஏற்படலாம். நீண்டகாலமாக தொடர்பு ஏற்படும்போது வெண்புரை எனப்படும் 'கற்றாக்' ஏற்படவும் கூடும். கண்ணில் பட்டால் உடனடியாக கண்களை நீரினால் நன்கு கழுவுங்கள்.

சருமத்தில் படும்போது சருமத்தை சற்று உறுத்தலாம். உடனடியாகக் கழுவிவிடுதல் போதுமானது. தொடர்ச்சியான தொடர்பு கொண்டிருந்தால் ஒவ்வாமை அழற்சியை ஏற்படுதுவது உண்டு. இதைக் கையாள வேண்டியிருந்தால் வேலை முடிந்ததும் உடனடியாகவே கைகளை நன்கு கழுவுவது முக்கியமானது.

இதன் மணமானது பலரிலும் சுவாசத் தொகுதியில் உடனடிப் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். அதிகளவு எச்சில் சுரப்பது, ஓங்காளம், சத்தி, வயிற்று வலி போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தலாம். சிலரில் மூச்சுத் திணறலையும் ஏற்படுத்த வாய்ப்பு உண்டு.

glucose-6-phosphate dehyrogenase (G6PD) பிரச்சினை உள்ளவர்களில் பாதிப்பு அதிகமாகும்.

நெப்தலீனானது மிருகங்களில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய காரணிகளில் ஒன்று என்பது



கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும் மனிதர்களில் இது பற்றிய தெளிவான ஆய்வு அறிக்கைகளைக் காண முடியவில்லை.

அந்த 5 வயதுக் குட்டிப் பெண் 2-3 பூச்சி உருண்டைகளை முதல் நாள் இரவு சாப்பிட்டுவிட்டாளாம். பரிசோதித்துப் பார்த்தபோது குழந்தையின் உடலில் எந்தவித பாதிப்புகளும் தெரியவில்லை. காலையில் சிறுநீர் சற்று இரத்த நிறத்தில் போனது என அம்மா கூறினாள்.

உடனடியாகவே சிறுநீரைப் பரிசோதித்தபோது அதில் மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. இருந்தபோதும் இரண்டு நாள்களுக்கு அவதானிப்பில் வைத்திருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

குழந்தைகள் தவறுதலாக உட்கொள்வதை அறிவோம்.

அதேபோல விளையாட்டாக அவற்றை முக்கினுள் அல்லது காதினுள் செலுத்தி விடுவதும் உண்டு. அவ்வாறு நடந்தால் நீங்களாக அதை எடுக்க முயலவேண்டாம். மூக்கினுள் கிடப்பதை எடுக்க முயலும் போது அது பிற்புறமாக விழுந்தால் சுவாசக் குழாயினுள் வீழ்ந்து மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் பாரிய ஆபத்து உள்ளது.

மருத்துவத்தைப் பொறுத்தவரையில் அதை உட்கொண்டிருந்தால் அதன் பாதிப்பை குறைப்பதற்கு Activated charcoal உபயோகிப்பது உண்டு. குருதி சேதமடைந்திருந்தால் குருதி மாற்றீடு செய்ய நேரலாம். நாளம் ஊடாக திரவங்களை ஏற்றவும் தேவை ஏற்படலாம்.

செல்லக் குழந்தைக்காப் பயந்து வந்த தாயானவள் தங்களது செல்லப் பூனைக்காகவோ நாய்க்காகவோ மருத்துவரிடம் செல்ல நேரலாம். ஏனெனில் பாதிப்பு உங்கள் வீட்டில் உள்ள மனிதர்களுக்கு மட்டுமல்ல வளர்ப்பு மிருகங்களிலும் ஏற்படலாம்.

எனவேதான் பூச்சி உருண்டைகளைப் பாவிப்பதில் அவதானம் தேவை என்றோம்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவகப் புற்றுநோயை இரத்தப் பரிசோதனையிலேயே கண்டறியலாம்


கருவகப் புற்றுநோயை கண்டுபிடிப்பதற்கான புதிய சோதனை முறை ஒன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ovarian cancer என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கருவகப் புற்றுநோய் கண்டறியும் சாத்தியங்கள் மேம்படும் என்று இந்த சோதனை முறையை பரிந்துரை செய்திருப்பவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நாற்பத்தி ஆறாயிரம் பெண்களிடம் பதினான்கு ஆண்டுகள் செய்யப்பட்ட பரிசோதனை முடிவுகளின்படி, கருவகப் புற்றுநோயை கண்டறியும் தற்போதைய பரிசோதனையை விட, இரத்தப் பரிசோதனை மூலம் இரண்டு மடங்கு துல்லியமாக கருவகப் புற்றுநோயை கண்டறிய முடியும் என்று தெரிய வந்திருக்கிறது.

அதேசமயம் கருவகப் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் உயிரை பாதுகாக்கும் அளவுக்கு இந்த நோயின் தொடக்கத்திலேயே இரத்தப் பரிசோதனைகள் மூலம் துல்லியமாகக் கண்டறிய முடியுமா என்பது குறித்து மேலதிக சோதனைகள் நடத்தப்படவேண்டியது அவசியம் என்றும் இந்த பரிசோதனைகளை மேற்கொண்ட லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கருவகப் புற்றுநோய் காரணமாக ஆண்டுக்கு சுமார் ஒன்றரை லட்சம் பெண்கள் உயிரிழப்பதாக மருத்துவ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.



# த.தே.கூ.வின்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரான மாவை சேனாதிராஜா தன்னுடைய இடத்தை குறிவைத்து பலரும் நகர்ந்து வருகின்றார்கள் என்ற அச்ச உணர்வோடு இருக்கின்றார்.

அவரினால், அழுத்தங்களின்றி தீர்க்க மான முடிவுகளை எடுக்க முடிய வில்லை. அத்தோடு, அவரை மீறிச் செயற்படுகின்ற வர்கள் மீதும் எந்தவொரு பணிப்புரை களையும் விட முடியவில்லை. மாறாக, தலைமைப் பதவியைப் பாதுகாப்பது எப்படி என்பது பற்றி மட்டுமே சிந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

இதனால், அதிகார அனுசரணை யோடு தலையெடுப்பவர்கள் மாவை சேனாதிராஜாவைத் தாண்டி செயலாற்று கின்றனர். அது, பல நேரங்களில் வேண்டாத நிகழ்வுகளையும் அரங்கேற்றி விடுகின்றது.

இதனிடையே, தந்தை செல்வாவின் 38ஆவது சிரார்த்த தினத்தையொட்டி தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நினைவுப் பேருரை ஆற்றும் அளவுக்கு நிலைமைகள் தலைகீழாகவும் மாறியிருக்கின்றன.

நல்லிணக்கத்துக்கான சமிஞ்ஞைகளை தமிழர் தரப்பு(ம்) வெளிப்படுத்த வேண்டும் என்பது வரவேற்கத்தக்கது தான். ஆனால், பௌத்த தேசிய மேலாதிக்க வாதத்தின் குறியீடாக தன்னுடைய ஆட்சிக்காலம் முழுவதும் செயற்பட்ட சந்திரிகா குமாரதுங்கவை அழைந்து வந்து, தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காக போராடிய தந்தை செல்வாவின் நினை வுப் பேருரை நிகழ்த்தக் கோருபவர்களின் எண்ணப்பாடு எப்படிப்பட்டது?

அதீத மென்போக்குள்ள தமிழ்த் தலைமைகளாக தென்னிலங்கையிடம் தங்களை முன்னிறுத்த முனையும் சிலரினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது என்று கொள்ளப்பட்டாலும், சந்திரிகா குமாரதுங்கவை நினைவுப் பேருரை ஆற்றுமாறு அழைப்பதற்கு முன்னால், தமிழ் மக்கள் பற்றியும் அவர்கள் கொஞ்சமாகவேனும் யோசித்திருக்க வேண்டும்.

ஏன், பண்டா- செல்வா ஒப்பந்தம் மற்றும் அதனை பௌத்த தேசியவாதத்தின் கோரிக்கைகளுக்கு அமைய கிழித்த சம்பவத்தையும் ஞாபகப்படுத்திப் பார்த்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையில், சந்திரிகா குமாரதுங்க தன்னுடைய கையில் இரத்தக்கறைகள் இல்லை என்பது மாதிரியான முன்வைப்போடு இனநல்லிணக்கம், சகோதரத்துவம் பற்றியெல்லாம் தமிழ் மக்களுக்கு வகுப்பெடுத்துவிட்டுச் சென்றிருக்கின்றார். அதனைவிட, முக்கியமானது அனைத்தையும் மறந்து ஒன்றிணைவோம் என்கிற அழைப்பையும் விடுத்திருக்கின்றார்.

நல்லிணக்கத்துக்கான செய்தி என்பது எம்முடைய முது கெலும்பை அடகு வைத்துவிட்டு விடுக்கப்பட வேண்டிய தில்லை என்பதை, சந்திரிகா குமாரதுங் கவை நினைவுப் பேருரை ஆற்றுவதற்கு அழைத்தவர்கள் எதிர்காலத்திலாவது கருத்திற் கொள்ள வேண்டும்.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதி பதியாக்கி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய தில் தமிழ் மக்களுக்கு கணிசமான பங்குண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிலவேளை, மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்காமல் விட்டிருந்தாலும் தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்திருப்பார்கள்.

அது, இயல்பாகவே மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானதாக மாறியிருக்கும். அப்படிப்பட்ட நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு செய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும். தமக்குத் தேவையான அரசியல் முடிவுகளை எடுக்கும் அளவுக்கு தமிழ் மக்கள் தயாராகிவிட்டார்கள்.

அவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் மனங்களையும் எதிர்பார்ப்புக் களையும் புரிந்து கொண்டு செயலாற்று வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீட்சிக்கு உதவும். அதுதான். தமிழர் அரசியலுக்கு தற்போதைக்கு அவசியமானது.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவது புதிதாக அமைந்த மைத்திரி அரசுக்கு நெருடல்களை ஏற்படுத்திவிடும் என்கிற நினைப்பில் தவிர்க்க நினைப்பதும் அதீத விட்டுக்கொடுத்தல்களைச் செய்வதும் என்றைக்குமே சரியான அரசியல் நகர்வாக இருக்காது.

ஏற்கெனவே, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளையாக மைத்திரி அரசு மாறியிருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில், இராஜதந்திர வெற்றிகளை தமிழ்த் தரப்பு பெற வேண்டியுள்ளது. அதற்கு, முறையான திட்டமிடல்கள் அவசியம்.

மாறாக, தென் னிலங்கைக்கான நற்செய்தி என்கிற பெயரில் எமது அரசியல் உரிமைகள் பற்றி பேசாமல் தவிர்த்துக் கொண்டிருப் பது மிகவும் மோசமான நகர்வு.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியின் இலங்கை விஜயத்தின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் முன்வைத்த விடயங்கள் அதீத மென்போக்குள்ளவையாக இருந்தன. இனப்பிரச்சினைக்கான தீர்வு, தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை என்பன பற்றி எந்தவொரு தருணத்திலும் விட்டுக் கொடுப்புக்களை செய்வது சரியல்ல.

ஏனெனில், என்னவாக இருந்தாலும் பௌத்த தேசிய மேலாதிக்க வாதமே இன்னமும் இலங்கையை ஆண்டு கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் கடந்த காலத்தில் இழந்தவை அதிகம். அந்த இழப்புக்கள் அரசியல் உரிமைகளுக்காகவே நிகழ்ந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில், அரசியல் உரிமைகளை எந்தவொரு தருணத்திலும் விட்டுக்கொடுப்பாக கொள்ளக் கூடாது.

அதனை, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர்களும், ஏனைய தமிழ்த் தலைமைகளும் கருத்தில் கொள்ள வேண்டும். எமது அரசியல் உரிமை, அதிகாரங்கள் எனும் கோரிக்கைகளினால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

அவற்றைப் புறந்தள்ளிவிட்டு செய்யப்படும், அரசியலினால் யாருக்கும் நன்மை கிடையாது. அது, அடிமை சாசனத்தை எழுதிக் கொடுப்பதற்கு ஒப்பானது. ஆகவே, விழித்துக் கொண்டு செயலாற்ற தமிழ்த் தலைமைகள் துணிய வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால் 2015 மே 13ஆம் திகதி வெளியிடப்பட்டது.